ISSN 2719 - 2520


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட் 2021

ஆண்டு 2 ▲ இதழ் 01

## முதலாமாண்டு சிறப்பிதழ்



கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை

# கவிமணி

1876 ஆம் ஆண்டு இந்தியாவின் குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் 1876 ஜூலை 27 இல் பிறந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஒரு புகழ் பெற்ற கவிஞராக மிளிர்ந்தவர். இவர் பக்திப் பாடல்கள், இலக்கியம் பற்றிய பாடல்கள், குழந்தைப் பாடல்கள், இயற்கை, வாழ்வியல் போராட்டக் கவிதைகள்,தேசியப் பாடல்கள், வாழ்த்துப் பாக்கள், பல்சுவைப் பாக்கள் மட்டுமல்லாமல் வரலாற்று நோக்கில் அமைந்த கவிதைகள் போன்றவைகளை எழுதுவதில் சிறந்து விளங்கினார்.

'எட்வின் அர்னால்டு' எனும் ஆங்கிலேயக் கவிஞரால் ஆங்கிலத்தில் கவிதை நடையில் எழுதப்பட்டு லண்டனில் வெளியிடப்பட்ட 'light of Asia' எனும் கௌதம புத்தரின் வரலாற்றையும், அவரின் கொள்கைகளையும் விளக்கும் நூலானது தேசிக விநாயகம் பிள்ளை அவர்களால் தமிழில் (ஆசிய ஜோதி) மொழி பெயர்க்கப்பட்டது. மேலும், பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் பாக்களையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இன்னும் பல்வேறு நூல்களையும் எழுதியிருக்கிறார்.

பல பள்ளிகளில் 36 ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்துள்ள இவர், ஆராய்ச்சித் துறையிலும் பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

1940 வருடம் டிசம்பர் மாதம் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த விழாவில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் 'கவிமணி' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார்.1954 ஆண்டு கவிமணிக்குத் தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது.
2005 ஆம் ஆண்டு அக்டோபரில் இந்திய அரசு இவரின் அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவித்தது.

தமிழுக்காக ,சமூகத்துக்காக அரிய பல பணிகள் செய்த அவர் தமது 78வது வயதில் (1954 செப்டெம்பர் 26) உயிர் நீத்தார்.


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை – ஆகஸ்ட் 2021

ஆண்டு 2 ▲ இதழ் 01

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:



email : muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka




# ஆசிரியர் பக்கம்

அன்பான வாசகர்களுக்கு இனியதமிழ் வணக்கம்!

எமது இதழைத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியான நிலையில், கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறேன். அவை சற்றே கரடுமுரடானவைதான்.

இதழொன்றை ஆரம்பிப்பதொன்றும் எளிதான விடயமல்ல. இருப்பினும் அன்பும், இதழியலில் ஐம்பதாண்டு கால அனுபவமுள்ள எமது கௌரவ ஆசிரியரின் ஆக்கமும் ஊக்கமும் எம் இதழை இவ்வளவு தூரம் வளர்த்து விட்டிருப்பதை நினைத்து, பெருமிதமும் பேரானந்தமும் கொள்கிறேன். என் வாழ்நாளெல்லாம் அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அத்தோடு, ஆரம்பத் திலிருந்தே என்னுடன் கைக்கோர்த்துப் பயணித்து வரும் அன்புத் தோழமைகளையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். இன்று இத்தனையும் சாத்தியமானது நீங்கள் தரும் நம்பிக்கையில்தான்.

வாசகர்கள் காணும் குறை நிறைகளையும், ஆலோசனைகளையும், கருத்து களையும் எம்மிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்! அது எம் இதழின் தரத்தை இன்னும் உயர்த்திக் கொண்டு முன்னேற வழிகோலும்.


ஆண்டுமலர் சிறப்பிதழை அச்சிலும் கொண்டு வர பேராவல் கொண்டிருந்தாலும், கொடிய கொரோனா பிரச்சினையால் ஏற்பட்ட தொடர் அசௌகரியங்களால் அது சாத்தியப்படாமல் போயிற்று. எனினும் கூடிய விரைவில், அதைச் செயல்படுத்த முயல்கிறோம். உங்கள் அன்பான ஒத்துழைப்பும், ஆதரவும் இருந்தால் எம் கனவு மெய்ப்படுமென நம்புகிறேன்.

சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சீர்குலையும் சமூகத்தை நெறிப்படுத்த எழுதுகோல் ஏந்துவோம். சிறப்பான ஆக்கங்கள் மூலம் சிறு அளவிலேனும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவோம். அனைவரும் இணைந்து சாதிக்கலாம்.வாருங்கள்!

உங்கள் வரவேற்போடு,

இனிவரும் இதழ்கள் உங்களுக்குப் பிடித்த பல சுவையான புது அம்சங்களுடன் மலரும். அனைவருக்கும் நெஞ்சம் நிறை நன்றிகளும் இனிய நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

– சித்தி வஃபிரா




# நாங்கூழ் நூல் மதிப்புரை

## வஃபீரா வஃபி

'நாங்கூழ்' கவிதாயினி மின்ஹாவின் கன்னி நூலாகும். இக்கவிதைத் தொகுப்பின் பெரு வாரியான கவிதைகள் இயற்கையின் படிமங்களைக் குறியீடுகளாக்கிப் புனையப் பட்டிருக்கின்றன. அவை வாசகரின் விழித்திரை களை அகலமாக்கி, கருவிழி களை நங்கூரமிடச் செய்து இதயத்துள் ஊடுருவும் என்பதில் ஐயமில்லை.

இவரின் சிந்தனையில் சிறகு பொருத்தி அழகு பார்க்கும் வார்த்தைகளுக்கு செறிவு அதிகம். நிறைய சொல்லாடல்கள் இத்தொகுப்பில் வானவில்லாய் வண்ணம் குழைத்து கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றன. அவற்றில் சிலவற்றை பார்ப்போமானால்...

"மழையின் தரிசுக்காடுகள்
காற்று நனைக்காத காகிதப்பட்டம்
இசை தரித்த புல்லாங்குழல்
பசுமையின் ஒரு பிடி பச்சையத்தில்
வரைந்த வனத்தின் வகிடு
வெகு நேரமாய் அங்கேயே
நின்று கொண்டிருக்கிறேன்
பாதைகள் நகர்கின்றன.... "

நம் பார்வையும் அங்கிருந்து நகர மறுக்கிறது

'கரையான்களே மனிதர்களை
விட்டு விடுங்கள்!
அவர்கள் அவர்களையே
தின்று கொண்டிருக்கிறார்கள்'
மனுக்குலத்தில் மனிதம் மரித்துப் போ
ய்க் கொண்டிருப்பதற்கு
இவை சான்று பகர்கின்றன.

இன்னும் சில கவிதைகள் நம் இதயத்தை சற்றே தட்டி, இத்தேசத்தின் கறுப்புச் சரித்திரத்தை நமக்கு மீட்டிப் பார்க்கச் சொல்கின்றனவோ?

'மௌட்டீகம் விழுங்கிய மயானத்தில்
பாலை நிலவரிகள் பாதை விழுங்கின.
ஈற்றில் என் தேசத்தில் அணைந்த
குரலில் காற்றின் ரீங்காரம்
கேட்பார் எவருமில்லை' ...

'எனதிரு குடுவைக்குள்
செறிந்த வண்டுகள்
பூந்தோட்டம் கேட்கின்றன.
நிறமிழந்த ரோஜாக்களை
கறுப்பு வெள்ளை
நிறங்கள் விழுங்கியபின்
போர்வைக்குள் செரிக்கிறது
போர்க்களம்.

அமைதியை மீள்நிரப்பும்
பேரமைதியைப் போர்த்திய
முள்வேலிகள் சற்றே
தளரும் போது
காற்றோடு கதைபேசி மறையும்
சுவடுக்காய் காத்திருக்கிறது
ஒரு வடு'

இக்கவிவரிகளின் கனதியில், இதயங்கள் செல்லரித்துப் போகக்கூடும்.

'பேரன்பின் உன்மத்தம்
கோப்பைகளில் வழிந்து கொண்டிருக்க
தாகம் பருகும்
இடைவேளைகளைக்கூட
அதரங்கள் அனுமதிக்கவேயில்லை'
காதலின் உச்சம்

இதுவாக இருக்கக்கூடுமோ?

'கரித்த மனதின் எக்களிப்பு
கடல் நனைந்த
முத்தங்களால் நிரம்பியிருக்க
தொடுவானப் புள்ளிகளின் கரைகளில்
கால் நனைக்கின்றது மேகம்'

கற்பனைக்கும் யதார்த்தத்துக்கும் இடையே தூது போகும் இவரின் எழுது கோல் புதிய வரைவுகளைப் படைத் திருக்கிறது எனச் சொல்லலாம்.

பட்டும் படாமலும் அரசியலைச் சாடும் சில கவிதைகளும் யதார்த்தங்களை சுட்டுவதாய் அமைந்து சிறப்பு சேர்ப்பதைக் காணலாம்.

'சொல்லிச் சூளுரைத்து
தொண்டை வறண்டு
கத்திய தொனிகளில்
செய்வதற்கு மீதமில்லை
அடுத்த நொடியே ஆவியாகிக்
கலைகிறது வாக்குப்பணி
ஆரவாரப் பேரொலி'.....
கைகட்டி நிற்கின்றவை
சுயாதீனம் தொலைத்து
கொடிகள் முளைத்த எந்திரங்கள்....

எல்லோருக்கும் ஒரு
கதிரைதான் வேண்டும்
தம்மிரு கால்கள் வேண்டாம்
நனைந்த பலியாடுகள்
பல்லாயிரம் எங்கோ கத்துகின்றன
தேர்வில் ஒரே ஒரு தவளை
ஓநாயாய் மாறி மீண்டும்
ஆடுகளை விழுங்குகிறது'

தரங்கெட்ட அரசியலை, நயமான வார்த்தைகளால் நாசூக்காக நையப் புடைக்கிறார் கவிஞர். ஆமாம்! இவரின் எழுத்தாணியே சாட்டையாய் மாறித் தன் கடமையைச் செய்திருக்கிறது.

இன்னொரு கவிதை சொல்வதோ
சோக சரித்திரம்
'சிவக்கும் செங்கடல் நிறையும் குருதி
வெற்றிலைக் களிம்பா
தகர்த்தெறியும் சிரியத்தளிர்கள்
பிதிர்காட்டில் விளைந்த களைமுட்களா?

மௌனத்தில் உறைந்திருக்கும்
மனிதத்தை, சாட்டை கொண்டு
மயிலிறகு வருடலெனத்
தடவிக்கொண்டிருக்கட்டும் உலகு'

நிகழ்கால அவலத்தை இங்கு வெளிச்சம் போட்டுக் காட்ட, உண்மையின் தகிப்பில் மனம் வெதும்புவதில் வியப்பில்லை.

'வெள்ளையை இலச்சினையாகப்
பிரகடனம் செய்!
எல்லா ஆட்சி நிறங்களும்
நிறமிழந்து போகட்டும்'


அமைதியாகவே ஆத்திரத்தை உமிழும் இவரின் எழுதுகோலுக்கில்லை தணிக்கைகள். இவரின் கருத்துச்செறிவு நிறைந்த கவிதைகளை உலகம் ரசித்து வியக்கும். 'நாங்கூழ்' இம்மண்ணுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் பயன் தரும்.

நூல் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ள:-

Fathima Book Centre 0770807787
Pages_Book_house அக்கரைப்பற்று

பூபாலசிங்கம் புத்தக நிலையம், கொழும்பு
0112422321

வெண்பா, யாழ்ப்பாணம். 0212225090



# குள்ள கருப்புசாமி

குள்ள

தேர்தல்
பணிக்கென தேர்வு
செய்த இடத்தில்
மதிய வேளையில்
மனதில் பட்டார்
குள்ள கருப்புசாமி

மூன்றாம் தர
நியமனத்தில் இருந்தவர்
மூன்றடிக்கும்
குறைவாகவே இருந்தார்

வெள்ளைத்தாளில் பதிக்கப்பட்ட
கருப்பு எழுத்துக்களை
காணத் தெரியாதவர்

அகத்தின் கருமையை
முகத்தில் அறிந்து
வெள்ளை அடிப்பதில்
வல்லவராய் இருந்தார்

ஜாதிமல்லி விடுத்து
வேறெல்லா மலர்களிலும்
வேறுபாடின்றி வந்தமரும்
வண்ணத்து பூச்சியாய்
எல்லோரிடமும்
பேசுவதாக இருந்தாலும்
ஏதோ ஒன்றை
போதித்துக் கொண்டே
இருந்தார்

பாதிக்கப் பட்டவர்களுக்கு
தேநீர் பருகுவதோ
தேவையான உணவை
உண்பதோ
எந்த நிகழ்விலும்
எல்லோரையும் உபசரித்தே
இறுதியில் அருந்தியவர்
என் மனதில் மட்டும்
முதல் இடத்துக்கு
முந்தி பெயர்ந்து இருந்தார்

விழியயரும் வேலைக்கு
வழியில்லாமல்
இலவச ஊசிகளை
இறக்கிக் கொண்டிருந்த
கொசுக்களை எல்லோரும்
விழியுறங்க வழி செய்து
விழித்திருந்தார்



# கருப்புசாமி

ஓட்டுப்பெட்டி எடுத்த
உச்சி நடுநிசி பொழுதினில்
அவருக்கு கொடுத்த
அறநூறு ரூபாயில்
அங்கு பணிபுரியும்
அடிமட்ட தொழிலாளர்களுக்கு
அன்பளிப்பாய்
வழங்கிக் கொண்டிருந்தார்

அப்போதந்த வாக்குச்சாவடி
பள்ளியின் கரும்பலகையில்
வாசித்த வாசகமொன்று
நெஞ்சில் ஈட்டி பாய்ச்சியது

"ஆயிரம் பொற்காசுகள்
அகப்பையில் இருந்தாலும்
அள்ளி எடுக்காமல்
கிள்ளிக் கொடுக்கும்
பெருஞ் செல்வந்தனைவிடவும்

தன்னிடம் இருக்கும்
ஒரு காசையும்
பிறருக்கு தானம் செய்பவரே
உலகத்தில் உயர்ந்தவர்" என்று
இப்போது விடிகாலை
பொழுதினில்
இருள் கிழித்து
கதிரவன் கதிர்களை பரப்ப
புறப்படும் அந்த
காலைப்பொழுதில்

எல்லோரையும் விட
மிக உயரத்தில் இருந்தார்
குள்ள கருப்புசாமி

**- நேசமுடன் ஈசு**



## அன்பின் மனைவிக்கு


உன்மீதான என் மொத்தப்
பிரியங்களும்
வேறெங்கும் தொலையவில்லை

உன் வயிற்றில் விருட்சமாகி
நம் வாழ்க்கை நந்தவனத்தில்
பேசும் மலர்ச்செடிகளாய்
மலர்ந்து மணம் பரப்பி நிற்குதடி

காலத்தின் கழிதல்களுக்குள்ளே
முதிர்ந்து உதிர்ந்த இளமைச் சருகுகள்

நம் காதல் சிந்தும்
உயிர்த்தூறலில் நனைந்த வாழ்க்கை
இறக்கைகளின் படபடப்பில்

சிதறிச் சிந்தும் துமிகள் பட்டு
மீண்டும் வாழ்க்கை மரமேறிப்
பசிய துளிர்களில்
பாலூறிய இலைகளாகிப்
பனி தாங்கி நிற்கும்



என் வாழ்வே !
இப் போலி வாழ்வின்
இன்னும் சில சோலிகளை
போலிகளைக் கடந்த பின்னர்
இனிதே ஒரு நாள் சிறகடிப்போம்..!!!!

**ரனூஸ் முஹம்மத் இஸ்மாயில்**

# பாசத்தை மிஞ்சிய பணம்...

- எம். பஹ்த் ஜுனைட்

முன்னொரு காலத்தில் மனிதன் அன்புக்கு கட்டுப்பட்டவனாக இருந்ததால் பண்புடன் வாழ்ந்தான், பாசத்திற்கு கட்டுண்டு வாழ்ந்ததால் பணம் பாசத்திற்கு அடிமையாக இருந்தது..

அன்புக்கும், பாசத்திற்கும், உறவு களுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததால் பணம் முக்கியத்துவம் இழந்தது மனிதன் புனிதனாக வாழ்ந்தான். தனது பாசத்திற்கான உறவு களுக்காக அவர்கள் மீது அன்பை பொழிவதற்காக பணம் தேட ஆரம்பித்தான் கொஞ்சமாக பணம் இருந்தாலும் பாசம் மிகப்பெரிய அளவில் இருந்தது, அதனால் குடும்பங்கள், உறவுகள் சந்தோசமாகவும், மகிழ்ச்சியாகவும் காணப் பட்டது.

இன்று மனிதனின் சகல விடயங்களையும் தீர்மானிப்பது பணம் ''பணம் இல்லாதவன் பிணம்'' என்று சொல்லும் அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகிறது, காலையில் இருந்து பணத்திற்காக ஓடும் மனிதன் ஓடிக் கொண்டே இருக்கிறான். அன்றைய பாசத்தின் நிலை இன்று தலைகீழாக மாறிக்காணப்படுகிறது.

ஒரு மனிதனின் அந்தஸ்து, பண்பு என்பவற்றை அவனிடம் உள்ள பணத்தை கொண்டே சமூகம் அளவீடு செய்கிறது. எவ்வளவு பெரிய சமூக துரோகியாக இருந்தாலும், அநியாயக் காரனாக இருந்தாலும், கொலை காரனாக இருந்தாலும் அவன் செல்வந்தனாக இருந்தால் சமூகம் அவனை புகழ்ந்து வள்ளல், மகான் பட்டம் கொடுத்து போற்றும். அதே போல் சமூக உணர்வுள்ளவன், சமூகத்திற்காக தன்னையும் வாழ் நாட்களையும் அர்ப்பணித்த தியாகி, ஒழுக்கமுள்ளவனாக இருந்தாலும் அவனிடம் பணம் இல்லை என்றால் அவனை பைத்தியம் என்றும் பிச்சைக்காரன் என்று வேலையில்லாதவன் என்றும் ஒதுக்கும் சமூகத்தில் நாம் வாழ்கிறோம்.

சமூகத்தின் நிலை இவ்வாறு இருக்க குடும்ப நிலைகள் அதனை விட மோசமாக இருக்கிறது. குடும்பத்தில் யாரிடம் பணம் அதிகம் இருக்கிறதோ அவர்கள் மீது பாசத்தையும் உறவையும் அதிகப்படுத்துவார்கள், அவர் ஒழுக்கத்தில் மோசமானவராக இருந்தாலும் குடும்ப நிகழ்வுகளில் அவரின் தீர்மானம் நல்லதோ கெட்டதோ அதற்கே முன்னுரிமை கொடுப்பார்கள், அவரை தலைமையாக்குவார்கள்.

ஒரு தாய்க்கு பல பிள்ளைகள் என்றால் அதில் வசதியான பணம் படைத்த பிள்ளைக்கே பாசம் அதிகம் காட்டப்படும். அதே போல் ஒரு தந்தை வயதான காலத்தில் அவரால் வருமானம் (பணம்) வரக்கூடிய நிலை இருந்தால் நன்றாக கவனிப்பார்கள் இல்லாதிருந்தால் முதியோர் இல்லத்தில் விட்டு விடுவார்கள். ஒரு கவிஞன் பாடலில் இதனை அழகாக சொல்லுகிறார்.

''உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும்..

உன் நிலமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் உன்னை மிதிக்கும்..''

இதுதான் நிலமை நம்மிடம் பணம் இருந்தால் பாசத்தை வேஷமாக்கிக்கொண்டு இல்லாது போன உறவுகளும், சொல்லாது போன சொந்தங்களும், நடுத்தெருவில் விட்டுப் பிரிந்த நட்புகளும் கூடவே தானாய் வந்து ஒட்டிக்கொள்ளும்.

இவ்வாறு மனிதனின் அன்பு,

பாசம், மரியாதை என்பவற்றை தீர்மானிக்கும் சக்தியாக பணம் இருப்பதால்தான் மனிதன் இன்று மனித உருவத்திலான பிணம் தின்னியாகவும், அரக்கனாகவும் மாறியுள்ளான்.

இன்று உலகில் கொலை, கொள்ளை மலிந்து காணப் படுவதற்கும் பணத்தாசை, பேராசைதான் காரணம்..

பாசத்திற்காக ஏங்கும் காலம் விரைவில்.. பணம் என்பது நமது அடிப்படை தேவைக்காகவே அன்றி நம்மை அடிமை படுத்துவதற்காக அல்ல..

## காய்கறிச் சந்தை

புதிதாய் வந்திறங்கிய
காய்கறிகள்

பழங்களின் வாசனையினூடே
ஓரமாய் ஒதுக்கப்பட்டிருக்கும்
அழுகிய பழ வாசம்

வாடிக்கையாளரின்
வாசனைத் திரவியத்தினூடே
மூட்டை சுமப்பவரின்
வியர்வை வாசம்

கூந்தலை அழகுபடுத்தியிருக்கும்
பூக்களின் வாசத்தினூடே
நடைபாதையில் சிதறிக் கிடக்கும்
காய்கறிப் பிசிறுகளின் வாசம்

எந்த வாசமும் இங்கே
முன்னிருத்தப்படுவதுவுமில்லை
மறைத்து
வைக்கப்படுவதுமில்லை.

சந்தை

காலங்காலமாய்
வெளிப்படுத்தும்
இலக்கணமே

எது வந்தாலும் போனாலும்
ஒரே வாசத்தை வீசுவதே !

**- நல முத்துகருப்பசாமி**

## பகலும்.. இரவும்... பருவத் தீ...

என்ன மாயம் செய்தாய்
என் நெஞ்சுக்குள்ளே வந்தாய்..

எந்தன் தோளில் சாய்ந்து
வஞ்சி என்னைக் கொய்தாய்..

இனிக்கும் காதலை நிரப்புகிறாய்
இனி இரவெல்லாம் தூங்காமலே..

இதயத்தில் ஆனந்தக் கூத்து
உதயம் வரை ஆசை பந்தாடுதே..

ஒவ்வொரு செல்லிலும்
ஆழித் தேரோட்டம்..

இடைவிடாமல் பொழியும்
உனது காதல் நீரோட்டம்..

இலையுதிர் காலத்தை
தீர்ந்து வைத்தாய் ..

உயிர்ப்புடன் பசுமை
உடலில் குடியேறியதே..

கோடை கால கரும்புச் சாறா..
ஆடை களைய வந்த மன்மத வீரா..

போதும் என்பதே காதலில் இல்லையே..
இனி பகலும்.. இரவும் எரியும் காமத்தீயே..

உருவாய் ..உறவாய் சிரிக்கின்றாய்
உயிரில் உயிரை எரிக்கின்றாய்
உள்ளும்.. புறமும் நிறைகின்றாய்..
உதட்டில் கவிதை சமைக்கின்றாய். .

உறங்காத இரவுகளை பரிசளித்தாய்
உள்ளத்தோடு உள்ளம்
கதைக்கின்றாய்..

உண்மையென்ற வார்த்தைக்கு
அர்த்தம் தந்தாய்

உலகில் காதலுக்கு இலக்கணமாய்.

**சாரதா சந்தோஷ்**
ஐதராபாத்



ஹைபுன்

# ராஜிலா ரிஜ்வான்

இரண்டு நண்பர்கள் .அதில் ஒருவனை மட்டும் நீண்ட நாட்களாக காண வில்லை. அவனை மற்றொருவன் தேடிக் கொண்டிருந்தான்.

திடீரென ஒரு நாள் காணாமல் போன நண்பனைப் பார்த்தான்.

அவன் நடை, உடை, பாவனை கள் ஒரு துறவி போல இருந்தது.

அதைப் பார்த்து, ‘‘ஏய்.. நண்பா! இது என்ன கோலம்?’’ என்று கேட்டான்;

அதற்கு அவன்,’’ஏய்.. இப்ப நான் ஒரு ஜென் துறவியாக்கும். என்னை நண்பா.. என்று கூப்பிடாதே’’ என்றான்.

‘‘ஓ..! அப்படியா...! சரி துறவி யாரே..! உங்களின் இந்த மாற்றம் குறித்து கூறுங்களேன்’’

‘‘அப்படி பணிவாகக் கேள். ஒரு பெரிய ஜென் துறவியை நீண்ட நாட்களாகக் கவனித்து வந்தேன். தற்போது அவரைப் போலவே நானும் மாறிவிட்டேன். ஆனால் எனக்கு தியானம் மட்டும்தான் இன்னும் வரவில்லை..» என்றான்.

உடனே அவனின் முட்டாள்தனம் நண்பனுக்குப் புரிந்தது.

ஆனாலும் “அப்படியா..! அதற்கு என்ன காரணமோ..?’’ என்று வினவினான்.

துறவி நண்பன், “அந்தத் துறவி ஒரு பூனையைத் தூணில் கட்டி வைத்திருப்பார். நானும் ஒரு பூனையை தேடித்தான் போகிறேன்..” என்றான்.

அதற்கு நண்பன், ‘‘பூனையா... அது எதற்கு..?’’ என்றான் ஆச்சரியத்துடன்.

துறவி நண்பன், ‘‘என்ன... முட்டாள் தனமாகக் கேள்வி கேட்கிறாய்... நானும் ஒரு பூனையை தூணில் கட்டி வைத்தால் தானே எனக்கும் தியானம் வரும்’’ என்றான் அப்பாவியாக.

நண்பனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆனாலும் அடக்கிக் கொண்டு, “அட முட்டாளே..! அந்த பூனை தியானத்திற்கு தொந்தரவாக இருந்திருக்கும். அதனால் அந்த ஜென் துறவி அதைக் கட்டி வைத்திருப்பார். ராஜாவைப் போல் வேடம் போட்டால் நீ ராஜாவாகிவிடுவாயா...?’’ என்றான்.

துறவி நண்பன், ‘‘நீ என்ன சொல்கிறாய்.. ‘‘ என்றான்.

அதற்கு நண்பன், ‘‘தியானம் என்பது பார்த்து செய்வதில்லை. உணர்ந்து செய்யவேண்டியது. பேசாமல் அந்தத் துறவியைப் போய் பார். உன் அறியாமை நீங்கும்’’ என்றான்.

அப்பொழுது துறவி நண்பன் தன் தவறை உணர்ந்தவனாய் அந்த ஜென் துறவியைத் தேடிச் சென்றான்.

‘அங்குமிங்கும் அலையும் பட்டாம்பூச்சி
ஒரு மனதுடன் பின்னால் செல்வதும்
தியானம்தான்’



# வெற்றிப் படிக்கட்டு

என்னங்க என்னங்க என்று மனைவி கௌசல்யாவின் குரல் கேட்டு திரும்பினான் ரகுவரன். போதுங்க யோசித்தது நான் சொல்வது சரியாக இருக்கும் துணிந்து முடிவெடுங்க என்று கணவன் ரகுவரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் கௌசல்யா.

ரகுவரன் காய்கறி வியாபாரம் செய்து வருகிறான். இப்ப கொஞ்ச நாளாக வியாபாரம் சரியாக போவதில்லை. போட்டிக்கு நிறைய கடைகள் வந்ததால் நஷ்டத்தில் தான் கடையை நடத்திட்டு வரான். கடன் வாங்கி வாங்கி வட்டி சேர்ந்து பெரிய தொகையாக வந்து அவர்களை பயமுறுத்தியது.



"உள்ளத்தில் உள்ளான் அடி! - அது
நீஉணர வேண்டும் அடி
உள்ளத்தில் காண்பாய் எனில் - கோயில்
உள்ளேயும் காண்பாய் அடி!"

கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை

இந்த போட்டி நிறைந்த உலகில் நாம் வெற்றி பெறனும்னா கொஞ்சம் போராடித்தான் ஆகனும். அதற்கு நாம காய்கறி வியாபாரத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரனும்னு ரகுவரனிடம் கௌசல்யா ஆலோசனை கூறினாள்.

கௌசல்யா சொன்னபடி அடுத்த நாளே கடையில் மாற்றங்கள் கொண்டு வந்தான். புதிய காய்கறிகளைத் தனியாக

விலைப்பட்டியலிட்டான். முதல் நாள் காய்கறிகளை விலைக் குறைப்புச் செய்தான். கௌசல்யாவும் அவனுக்கு உதவி செய்தாள்.

நீ சொன்னபடி விலை குறைத்த தால் வியாபாரம் கொஞ்சம் அதிகமாகிருக்கு ஆனால் இது போதாதேனு ரகுவரன் கௌசல்யாவிடம் சொன்னான். ஆமாங்க நாம இன்னமும் புதுசா எதாவது செய்யனும் அப்பதான் மக்கள் நம்மைத் தேடி வருவாங்கனு கௌசல்யா சொன்னாள்.

இப்ப உரம் போடாத காய்கறிகள், கீரைகளைத்தான் மக்கள் அதிகமா வாங்கு றாங்க. நாமும் அதைச் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். கிராமத்திற்குச் சென்று விசாயிகளிடம் இருந்து இயற்கை உரம் போட்ட காய்கறிகளை நாம் வாங்கி வந்து வியாபாரம் செய்தால் என்ன என்று கௌசல்யா ஆலோசனை கூறினாள்.

ரகுவரனும் அதை ஒத்துக்கொண் டான். மறுநாளே அதைச் செயல் படுத்தி னான். ஆரம்பத்தில் நிறைய வியாபாரம் ஆகவில்லை. போக போக மக்கள் அவனது கடையைப்பற்றி தெரிந்துகொண்டனர்.

கௌசல்யா வாட்சப் இல் குரூப் ஆரம்பித்த அதன்மூலம் தனது கடையை விளம்பரப்படுத்தினாள். தினமும் காய்கறி களின் வரவும் அதன் விலையும் பதிவிடுவாள். நேரில் வர இயலாத வர்களுக்கு வீட்டிற்கே சென்று டெலிவரி செய்யும் வசதியும் உள்ளதால் வியாபாரம் நல்லா சூடு பிடித்தது.

இலாபம் கிடைக்கத் தொடங்கி யதும் மெல்ல மெல்ல கடனை அடைத் தனர். ரகுவரனும் கௌசல்யாவும் அவர் களது விடாமுயற்சி மூலம் வெற்றிப் படிக்கட்டை அடைந்தனர்.

**~ ஜனனிகுமார்**

# கொலையும் செய்வாள் பத்தினி

– அனுராஜ்

மூணாறு மலைப் பாதையில் படு வேகமாக மேலேறிக் கொண்டிருந்தது மாருதி ஸ்விப்ட். வளைந்தோடிய மலைப் பாதைகளில் சர்வ சாதாரணமாக நொடித்து வளைத்த கார்த்திக், தான் மலைப்பாதையில் கார் ஓட்டுவதில் எக்ஸ்பர்ட் என நிரூபித்தான். அவனது அருகில் அமர்ந்த படி அவனது தோளில் சாய்ந்து கொண்டு அவனது காதை செல்லமாய் கடித்துக் கொண்டு வந்த ரேஷ்மா, அவனது இளம் புது மனைவி..இருவருக்கும் சமீபத்தில் தான் மணமாகி இருந்தது.

போடிமெட்டு மலைப்பாதையில் ஆங்காங்கு துவக்கத்தில் பெரிய பெரிய மரங்களுக்கு ஊடாக சில ஏலக்காய் செடிகள் கண்ணில் பட்டாலும், பண்ணை யார் எஸ்டேட்டை தாண்டியதும் கண்ணுக்கு ரம்யமாய் தேயிலைத் தோட்டம் விரிந்தது. வழி நெடுக பச்சைக் கம்பளத்தைப் போர்த்தியபடி ஆங்காங்கு சரிவில் ஓடியிருந்த தேயிலைச் செடிகளையும், கூடைகளை முதுகில் சுமந்தபடி தேயிலைக் கொழுந்துகளைப் பறித்து கூடையில் போட்டுக் கொண்டி ருந்த பெண்களையும் விழிவிரிய பார்த் தவளாய் ரேஷ்மா மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போய் இருந்தாள். பனி மேகம் தவழ்ந்து மலைமுகடை வருடிச் செல்வதையும், ஏற்றி விட்டக் காரின் கண்ணாடிகளையும் மீறிக் கொண்டு சில்லிட்டுக் கொண்டிருக்கும் பனியும் அவளுக்கு புதுமையாய் இருந்தது. சென்னையின் கொளுத்தும் வெயிலை அனுபவித்தவளுக்கு இந்த மலை பிர தேசம் மனதைக் கவர்ந்தது. வழியில் தென்பட்ட சிறு நீரோடைகளும், சற்று உயரத்தில் இருந்து விழுந்து கொண்டிருந்த அருவி யின் பால் வண்ண நீரும் மனதில் மகிழ்ச்சியை விதைத்திருந்தது. பாதையோர பலகை ஒன்றில் சாம்ராஜ் எஸ்டேட் என்ற வழித்தடம் பார்த்து, சட்டென இறங்கிய அந்த மண்சாலையில் காரைத் திருப்பினான் கார்த்திக்.

இருமருங்கும் பெயர் தெரியாத பலவிதக் காட்டுச் செடிகள்..விதவிதமான மலர்கள்..ஆங்காங்கு தெரிந்த உயர்ந்த மரங்களில் சுற்றிப் படர்ந்தோடிய மிளகு கொடிகள். மண்பாதை சற்று தூரம் சென்று சட்டென விரிந்த இடத்தில் காணப்பட்டது ஒரு பழைய பங்களா.

கார் நின்றதும் கவனித்த ரேஷ்மா வின் முகம் விவரிக்க இயலாத உணர்ச்சியை வெளிப்படுத்தியது. புருவங்கள் உயர, அந்த மாளிகையையே இமைக் காமல் பார்த்தவள், “கார்த்திக். .நான் இந்த மாளிகைக்கு ஏற்கனவே வந்திருக்கிறேன்..” என்றாள்.

கார்த்திக்கே இப்போது தான் இங்கு வருகிறான். அவ்வாறு இருக்க ரேஷ்மா எப்படி இங்கு வந்திருக்க முடியும்..! சொன்னவளை ஆச்சர்யமாய் பார்த்தவன், “ரேஷூ, நீ வரும் போது சென்னையை விட்டு வெளியேறினதே இல்லைன்னு சொன்னே..இப்ப இந்த பங்களாவுக்கு வந்திருக்கேன்னு சொல்றீயே..?” என்றான் ஆச்சர்யம் பொங்கிய குரலில்.

“கார்த்திக்.. உண்மையா தான் சொல்றேன்.. நான் இந்த பங்களாவுக்கு வந்திருக்கேன்.. வேணும்னா பாருங்க.. கதவை திறந்து ஹாலுக்குள் நுழைஞ்சதும் பெரிய காட்டெருமைத் தலையை பாடம் பண்ணி சுவரிலே வச்சிருப்பாக..” என்றாள் கலவரம் தொனித்த குரலில்.

“சரி.. வா.. அதையும் பார்த்தி டலாம்..” என்றவாறு அவளை அணைத்துக் கொண்டு படிகளேறியவன்.. மூடப் பட்டிருந்த கதவினைத் தட்டினான்.

சிறிது நேரத்திற்குப் பின் வந்து கதவைத் திறந்த மனிதனுக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும்.. நரைத்த தலையை

மறைத்து ஒரு கம்பளி குல்லாயும், கனமான ஸ்வெட்டர் ஒன்றும் போட்டிருந்தான். வாயிலிருந்து குப்பென சாராய வாடை வீசியது.

“யார் நீங்க..? யார் வேணும்..”

“கந்தன் தானே..உங்க பேரு..?”

“ஆமா..!”

“நான் பரமசிவம் பிள்ளை மகன் கார்த்திக்..அப்பாஇருந்தவரைஅவ்வப்போது இங்கு வந்து போய்க் கொண்டிருந்தார்.. அவர் இறந்ததுக்கு அப்புறம் இங்கு வர்றதே நின்னு போச்சு.. நானும் பெங்களூர்லே வேலைக்கு போயிட்டேன்.. இப்ப தான் கல்யாணம் முடிஞ்சது.. அதான் மனைவியை அழைச்சிட்டு எஸ்டேட்டை ஒரு ரவுண்ட் பார்த்துட்டு போலாம்னு வந்தேன்.”

“முதலாளி நீங்களா..? உங்களை சின்னப் பிள்ளையிலே மெட்ராசுக்கு வந்திருக்கும் போது பார்த்தது.. அம்மா நல்லா இருக்காங்களா..?”

இருவரும் பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டிருக்கும் போது அந்த பங்களாவை நோட்டம் விட்ட ரேஷ்மாவின் பார்வை, ஹாலின் மையத்தில் மாட்டப் பட்டிருந்த எருமைத் தலையைக் கண்டதும் கலவரமானதோடு, கார்த்திக் சட்டையின் தோள் பகுதியை அழுத்தமாக பிடித்தாள். ரேஷ்மாவின் பார்வை போன திக்கை தொடர்ந்த கார்த்திக்கும் சற்றே ஆச்சர்யத்திற் குள்ளானான்.

இருவரது பார்வை போனதைக் கண்ட கந்தன், “ஐயா.. அது உங்க தாத்தா சாம்ராஜ் வேட்டையாடி கொண்டு வந்த எருமைத் தலை. பாடம் செஞ்சு மாட்டியிருக்கு.. அவருக்கு வேட்டையில் ரொம்ப நாட்டமுங்க.”

“ம்...ம்..» என்றவனாய் , « கந்தா நாங்க தங்கறதுக்கு ரூமை ஒழிச்சுக் கொடு.. சரி இங்க யாரெல்லாம் இருக்கீங்க..?”

“நான் மட்டும் தான் ஐயா, உங்களுக்கு சமைச்சுப் போட நம்ம தோட்டத்திலே வேலைப் பார்க்கற மரகதத்தை கூப்பிட்டுக்கலாம்.. 'நான் ஒண்டிக்கட்டை ஏதையாவது செஞ்சு சமாளிச்சுக்குவேன்.. சரி நீங்க அறையிலே இருங்க..நான் போய் மரகதத்தை கூப்பிட்டு வந்துடறேன்..” என்றவனாய் வெளியேறினான்.

மாலை நேர வெயில் மறைந்து, இலேசாய் இருள் கவியத் துவங்கி யிருந்தது.


வந்து நின்ற மரகதம் பருவத்தின் வனப்பில் வஞ்சனையில்லாமல் புஷ்டி யாய் இருந்தாள். அவள் விறுவிறுவென இருவருக்கான அறையை பெருக்கி சுத்தம் செய்ததோடு, படுக்கை விரிப்புகளை உதறி விரித்துப் போட்ட நேர்த்தி, அவளது சுறுசுறுப்பு கார்த்திக், ரேஷ்மா இருவரையும் கவர்ந்தது.

“முதலாளிக்கு இப்பதான் கல் யாணம் ஆச்சுங்களா.. அவுகளும் அழகா இருக்காங்க.. அது சரி ஒட்டு புல்லாட்டம் ஒட்டிக் கிட்டே இருக்காக..உங்களுக்கு என்னென்ன வேணும்னு சொல்லுங்க, நான் சமைச்சு போடறேன்” என்றாள் படபடவென பட்டாம்பூச்சியாய்.

“நீயும் அழகா தான் இருக்கே.. நல்லா பேசவும் செய்யற..” என்றாள் முதன்முறையாக வாயைத் திறந்து ரேஷ்மா.

“சீ..போங்க...” என வெட்கப் பட்டாள் மரகதம்.

இரவு.. உணவிற்குப் பின்..



## தன்முனை கவிதை

நல்லதொரு தேர்வு
நாளையை நிர்ணயிக்கும்
நல்லதோ கெட்டதோ
நாளும் உணர்த்திடும்...!

கலைவாணி சுரேஷ்பாபு

கட்டிலில் அமர்ந்தபடி ஆப்பிளை வெட்டி ரேஷ்மாவிற்கு கொடுத்துக் கொண்டிருந்தான் கார்த்திக்.

''ம்..போதுங்க... நிறைய சாப்பிட்டாச்சு..'' என்றதும், ஆப்பிளை நறுக்கு வதை நிறுத்திவிட்டு, பழத்தையும் கத்தியையும் அங்கிருந்த மேசை மேல் வைத்தவனாய், ரேஷ்மாவை நெருங்கி குளிருக்கு இதமாய் இறுக்கி அணைத்தான்.

''ச்சீ..விடுங்க... கார்லே வந்தது அலுப்பா இருக்கு..'' என அவனைத் தவிர்த்தவள், குளிருக்கு இதமாக கம்பளிக்குள் நுழைந்தாள். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த இருவரும் எப்போது நித்திரையைத் தழுவினார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

குளிருக்கு இதமாய் கம்பளிக்குள் முடங்கியிருந்த ரேஷ்மா கனவு காணத் துவங்கியிருந்தாள்.

ஹாலின் மையத்தில் மாட்டப்பட்டிருந்த காட்டெருமை தலையை பெருமிதம் பொங்கும் விழிகளால் பார்த்துக் கொண்டிருந்த சாம்ராஜூக்கு முப்பதைந்து வயதிருக்கும். வேட்டையாடுவதில் தனித்த ஒரு பிரியம். தனது திறமையால் வேட்டையாடப்பட்ட காட்டெருமை ஒன்று, சுவரில் தொங்கிக் கொண்டிருப்பதை பெருமை பொங்க பார்த்துக் கொண்டிருந் தவனது கவனத்தை கலைத்தது.

''சாமி.. இங்கே எஸ்டேட்ல ஏதாவது வேலை இருக்குதுங்களா.. நாங்க வெளியூரு..'' சொல்லிக் கொண்டு போனவனின் அருகில் நின்றிருந்த பெண் அழகாய், திரட்சியாய் காட்டெருமைத் தலையை வைத்தவிழி மாறாமல் பார்த்தபடி நின்றிருக்க, சாம்ராஜின் பார்வை அப்பெண்ணின் மீது நிலை கொண்டது.

''உங்க பேரு என்ன..?''

''ராசவேலு சாமி..''

"இது.. உங்க மகளா? பேர் என்ன..?

''ஆமாங்க ஐயா.. காவேரி..''

''சண்முகம்.. இந்த பெரியவரையும், அவரோட மகளையும் நம்ம ஹெஸ்ட் ஹவுஸ்லே தங்க வை.. நம்ம தோட்டத்துலே ஏதாவது வேலை இருந்தா பார்க்கச் சொல்..''

''சரிங்க..ஐயா..''

சாம்ராஜை வணங்கியபடி விடை பெற்ற இருவரும், சண்முகத்தைத் தொடர, சாம்ராஜின் பார்வையோ நடந்து செல்லும் காவேரியின் பின்னழகில் லயித்தது.

காவேரியும் அவளது தந்தையும் எஸ்டேட்டிற்கு வந்து ஒரு வார காலத்திற்கு மேலாகியிருந்தது.

சாம்ராஜூக்கு காவேரியின் மேல் ஒரு கண்ணாக இருந்தது. அவ்வப்போது ஆசையை அவளது காதில் போட்டாலும் கண்டுகொள்ளாமல் இருந்த காவேரியின் மேல் அவனுக்கு கோபத்திற்கு பதில் மோகமே மேலோங்கியது.

அன்று தோட்டத்திற்கான உரம் வாங்குவதற்காக சண்முகமும், ராசவேலும் வெளியூர் சென்று விட, சாம்ராஜ் தனது நெடுநாளைய ஆசையை தீர்த்துக் கொள்ளும் முனைப்புடன், சுற்றும் முற்றும் பார்த்தபடி ஹெஸ்ட் ஹவுஸை நெருங்கியவன் அதன் கதவைத் தள்ள அது கிறீச்சென சத்தத்துடன் திறந்து கொண்டது. சட்டென நுழைந்து கதவை தாளிட்டவனாய், மெல்ல அறைக்குள் எட்டிப் பார்த்தவனை, கட்டிலில் படுத்திருந்த காவேரி ஏகத்திற்கு உசுப்பினாள்.

ஹெஸ்ட் ஹவுஸை நோக்கி இவன் நடந்த வேளையில், தனது குடிசையில் இருந்து வெளியே வந்த சண்முகத்தின் மனைவி ரங்கம்மா தனது முதலாளி திருட்டுத்தனமாய் ஹெஸ்ட் ஹவுஸை நோக்கிப் போவதை அறிந்து, தனது மகன் கந்தன் உறங்கிக் கொண்டிருந்த குடிசையின் கதவை இலேசாய் தாளிட்டு விட்டு, சாம்ராஜைத் தொடர்ந்தாள்.

மெல்லக் கட்டிலில் அமர்ந்தவன், காவேரியைத் தீண்ட சட்டென விழித்துக் கொண்டவளாய் தனது எதிர்ப்பினைக் காட்டினாள். கூடவே கத்தவும் செய்தாள். காவேரியின் சத்தம் கேட்பதை அறிந்த ரங்கம்மா அறையின் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தவளாய், ''முதலாளி ஐயா.. அவளை விட்ருங்க..பாவம்..''

திடீரென குரல் கேட்டு திரும்பிய சாம்ராஜிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட காவேரி சமையல் அறைக்குள் நுழைந்தவளாய், அங்கிருந்த கத்தியை கையில் எடுத்துக் கொண்டாள்.

''சீ..போ..உன்னை யார் இங்கு வரச் சொன்னது..» என்று எரிந்து விழுந்த

சாம்ராஜ், தன்னிடம் இருந்து நழுவிய காவேரியை அணுக.. அவளது கைகளில் முளைத்திருந்த கத்தியைக் கண்டு சற்றே மிரண்டான்.

''முதலாளி.. கிட்டே வராதீங்க.. வந்தா நான் என்னையே குத்திட்டு செத்துப் போவேன்..''

''காவேரி. வேண்டாம் சொல் றதைக் கேளு..'' கண்களில் காமம் வழிய நெருங்கிக் கொண்டிருந்தவனைக் கண்ட தும், வேறு வழியின்றி தனது வயிற்றில் கத்தியைப் பாய்ச்சிக் கொண்டவள் நீளம்ம்ம்மாய் அலறினாள். வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கம்மாவும் இதைக் கண்டு மயங்கி விழ..சாம்ராஜை நோக்கி முறைத்த காவேரி.. ''பாவி.. உன்னையும், உன் குடும்பத்தையும் சும்மா விட மாட்டேன்..'' என்றவளாய் இரத்தம் வழிந்தோட மயங்கி சரிந்தாள்.

அதே விநாடி.. பங்களாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். ராச வேலும், சண்முகமும்.

சாம்ராஜ் ஹெஸ்ட் ஹவுஸி லிருந்து வெளியே வரவும், இருவரும் சாம்ராஜை அணுகவும் சரியாக இருக்க, ராசவேலு துவண்டு போய் வரும் சாம்ராஜைப் பார்த்தவனாய் வீட்டிற்குள் ஓடியவன், ''காவேரி'' என பயங்கரமாய் அலறினான். அவனது அலறலைக் கேட்டு உள்ளே ஓடிய சண்முகம் நிலைமையறிந்து செய்வதறியாது திகைத்தான். பின் சட்டென சுதாரித்தவனாய்,

''ஐயா.. கொஞ்சம் பணம் கொண் டாங்க.. ராசவேலை சரிகட்டி எங்காவது அனுப்பிடலாம்..காவேரியை நம்ம எஸ்டேட் மயானத்திலே அடக்கம் பண்ணிடலாம்..'' என்றான் படபடவென்று.

அவனது பேச்சினை ஏற்று பங்களாவிற்குள் சென்று திரும்பிய சாம்ராஜ் கையில் கட்டாய் பணம் பிதுங்கிக் கொண்டு தெரிந்தது.

''ராசவேலு..நான் காவேரியை கொல்லணும்னு நெருங்கலே, ஆனா அவளே தன்னை கத்தியாலே குத்திகிட்டா.. நடந்தது நடந்து போச்சு..இந்தா பணத்தை வாங்கிட்டு எங்கேயாவது போயிடு..நாங்க சமாளிச்சுடறோம்..'' என்றான் சாம்ராஜ்.

''முதலாளி.. அவ ரொம்ப ரோசக்காரி முதலாளி.. எங்களுக்கு ஆதரவு தந்தீங்கன்னு தான் இப்ப நான் அமைதியா போறேன்.. எனக்கு உங்க பணம் வேண்டாம்.. நான் அன்பா வளர்த்த என் மகளே போன பிறகு பணத்தை வச்சு நான் என்ன பண்ண...!'' என்றவனாய், இறுதியாக வீட்டிற்குள் விழுந்து கிடந்த காவேரியைக் கண்டதும் தனது துண்டினை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டு அழுதபடியே தளர்ந்து போய் அந்த பங்களாவை விட்டு நடக்கத் துவங்கினான்.

அவன் சென்றதும், மளமளவென சண்முகமும், சாம்ராஜும் காவேரியின் உடலை காருக்குள் திணித்தவர்களாய் மயானத்திற்கு கொண்டு சென்று குழியைத் தோண்டி எவரும் அறியாமல் புதைத்து விட்டு திரும்பினார்கள்.

மயக்கம் தெளிந்து எழுந்த ரங்கம்மா, கணவனைக் கண்டதும் நடந்த விசயத்தைச் சொன்னாள்.

''இதோ பாரு, பெரிய இடத்து சங்கதி..தலையிடாதே..எதையும் யார்கிட்டேயும் சொல்லிட்டு திரியாதே.. பெண்ணைப் பெத்தவனே அமைதியா போயிட்டான் தெரிஞ்சுதா..'' என மனைவி யின் வாயைக் கட்டினான் சண்முகம்.

நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்த ரேஷ்மா திடுக்கிட்டு கண்விழித்தாள். தான் இதுவரை கண்டது அனைத்தும், கனவா..ஏன்..? இது போன்றதொரு கனவு தனக்கு வரவேண்டும். சட்டென தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த கணவனைப் பார்த்தாள்.. ''இது... இது... கனவில் வந்த சாம்ராஜ் போல் அல்லவா உள்ளது...'' அவனைக் கண்டதும் அவளுள் ஏதோ மாற்றம் நிகழத் துவங்கியது. சத்தமின்றி கட்டிலை விட்டு எட்ட இருந்த கத்தியை எடுத்தவள், தன் பலங்கொண்ட மட்டும் அருகில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த சாம்ராஜின் கழுத்தை நோக்கி சட்டென இறக்கினாள்.

மறுநாள் காலை..

கணவனை கொடூரமாய் கொலை செய்த மனைவி. திருமணமான சில தினங் களிலேயே நடந்த பயங்கரம்.. எனும் செய்தி, தலைப்புச் செய்தியாக பத்திரிகை களில் இடம் பிடித்திருந்தது. ■



# பக்குவமாய் பாதுகாப்போம்...:

பசியது வந்துவிட்டால்
பத்தும் பறந்திடுமாம்.

உரியநேரம் தாண்டினால்
ஏழையேது,  பணக்காரனேது.

புரிதலில்லா உலகமிது,
பரிவுடனே நடந்திடுவோம்.

எண்சாண் உடம்பிற்கு
ஒருசாண் வயிறு அவசியமே.

தலைமுறைக் கடந்துவரும்
சொத்துகள் பயனில்லை.

பசித்தவாய்க்கு தண்ணீராவது
தந்திடல் வேண்டுமன்றோ.

சுயநலத்தில் பொதுநலமும்
சிறிதாவது இருத்தலாகும்.

யானையது சிதறுகின்ற
ஒருபிடியுணவு பல்லுயிர்க்கு

வீண்பெருமை இங்கெதற்கு
செழுமைக்கு வழியிருக்கு.

பாரதிகண்ட கனவதனை
மெய்ப்பித்தல் நல்லுறவாக.

எவ்வுயிர்க்கும் ஒருசாண்
வயிறுதானே, படைப்புதானே.

நல்லுணவைப் பகிர்ந்தளித்து
நானிலமேக் காத்திடுவோம்.

பொன்பொருளைக் கேட்கவில்லை,
தேடியலைந்தும் திரிவதில்லை.

உரியநேரப் பசியதனைப்
போக்குதலே நம்கடமை.

உழைப்பாளி எவர்க்குமே
பசியாறல் முக்கியமன்றோ.

விலங்கினம் பறவைகளும்
தேடியலைதல் உணவிற்காக.

நலம்யாவும் விளைந்திடவே
நாடியவர்ப்பசி போக்கிடுவோம்.

குலந்தழைக்கும் செயல்யாவும்
உறுபசியைப் போக்கிடவே.

பலமான சமுதாயம்
படைத்தவனின் கிருபைதானே.

நலிவுற்ற ஏழையவர்கள்
வலிமைப்பெற வழியமைப்போம்.

**சா.சையத் முகமது**

கிருட்டிணகிரி





# என்னைக் காணோமென்று தேடுகிறார்கள்

என்னைக் காணோமென்று தேடுகிறார்கள்
எவருக்கு எத்தேவை என்றாலும்
என்னைக் காணோமென்று தேடுகிறார்கள்

விடியற்காலையில் வீதியில் கோலமிட
கரங்கள் புள்ளிகள் வைக்க
மனமோ அலுவலகப் பேரேடுகளை கணக்கிடுகிறது

ஏய், இந்தா, அம்மா எனும்
அழைப்புகளுக்கிடையே
துவைத்தலும் பெருக்கலும் சமைத்தலுமாய்
தொடரும் காலைப்பொழுது
மனமோ ஏழரை மணி பேருந்தைப் பிடிக்க அலைபாயும்

துளைத்திடும் பார்வைக் குத்தீட்டிகளையும்
எள்ளலையும் எகத்தாளத்தையும் உணர்ந்தும்
உணராதவளாய் பயணித்து
கணினியையும் கண்களால் மேயும் கல்லுளி மங்கர்களையும்
ஒருங்கே சமாளிக்கையில்
சாப்பிடாத வயிறு கதறும்

மயக்கும் மாலையில் குழந்தைகளின் படிப்பு,
நாளைய பொழுதிற்கான முன்னெடுப்பு
இரவு உணவென இடுப்பொடிய
அக்கடாவென சாயும் வேளையில்
மேலே படரும் கனத்தினை
என்ன செய்ய...



என்னைக் காணோமென்று நானும் தேடுகிறேன்

அன்புச்செல்வி சுப்புராஜூ

# தன்முனைக்கவிதைகள்

கூடுகட்ட ஆயத்தமாகிறது
வாயில் புல்லுடன் சிட்டுக்குருவி
மரங்கள் மட்டுமல்ல
வீடுகளில் மாடங்களும் இல்லை..!

*

கசியும் குழாய்த் தண்ணீர்
தாகம் தீர்க்கும் குழந்தை
வழிந்தோடும் தண்ணீருக்கு
தவமிருக்கும் காகம்.

**ஆர் ஜவஹர் பிரேம்குமார்,**
பெரியகுளம்.

***

இரவின் தனிமைக்கு
துணை கிடைத்தது
பறந்து ரீங்காரம்
செய்யும் வண்டுகள்

**பவித்ரா**

***

பாரதியின் புத்தகங்கள்தான்
என் வாழ்க்கை என்றான்
புத்தகம் வாங்கும்
எடை வியாபாரி

**ர.சுகாசினி**

***

காற்று கொடுத்த
கிழிந்த சட்டை
போட்டுக் கொண்டது
வளர்ந்த முட்செடி...

**எ.சாக்ரடீஸ். மதுரை.**

***

புதிய அம்மாவாக
பெரியவள் ஆனதால்
சிறியவளின் சேட்டை
எல்லையில்லாமல் போனது

**சித்ரா பாலன்**

***

நீ இட்டக்கோலம்
மிதிக்க மனமில்லை
அதில் ஊர்ந்தவை
எறும்புகள் என்பதால்...

*

நெல் வயலில்
திருப்பிய மடை
நினைவாக சென்று பார்க்க
நெளிந்தபடி மண்புழு.

**கண்ணுசாமி பூமாலை.**

***

மனித வாழ்வின்
மனம் நாடி கண்ணீர்
உலக உயிரினங்களின்
உயிர்நாடி தண்ணீர்

*

இயற்கை வழியில்
மனிதன் எனில் வாழ்வு
மனிதன் வழியில்
இயற்கை எனில் வீழ்வு

**முனைவர் த.சாந்தகுமாரி**

***

காலுக்குச் செருப்பில்லை
கவலையிலே நடந்தேன்
கால் இல்லாதவனைக்
காணும் வரை..

**வே.கல்யாணகுமார்.**

வானவில் எண்ணங்கள்
தென்றலும் புயலுமாய்
நடைமுறை யதார்த்தங்கள்
மௌனமும் இரைச்சலுமாய்

**இரா .விஜயகல்யாணி**

***

அறிவியல் படித்தவன்தான்
எதையும் உருப்பெருக்குவதில்லை
இயல்பாய் ஏற்கிறேன்
இயற்கையாய் வாழ்கிறேன்

**ராஜூ ஆரோக்கியசாமி**

***

நேசிப்பில் சிக்கினேன்
யோசிக்க மறந்தேன்
சிதறிய சிரிப்பில்
சில்லறையாய் நான்

**முனைவர் ப.பாக்கியலட்சுமி**

***

பிறர் வாசிக்க
கொஞ்சமும் அனுமதியேன்..
உனக்காக எழுதும்
என் மனதை..!

**ஷர்ஜிலா யாகூப்**

***

இன்னல்கள் இறைந்த பாதையில்
காலம் அவிழ்த்த உயிரிழை
கனன்று கனிகிறது
அந்த மூச்சின் அறுதியாய்..

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

***

**அன்பெனும் ஒற்றைச் சொல்லில்**
**அமைதியாய் அடங்கிப் போகிறேன்**
**நீயோ தீராக் காதலாய்**
**ஆழ்மனதில் அலை மோதுகிறாய்**

**- வஃபீரா வஃபி**

# இயற்கை

மா மா காய்



இனிய குரலைக் கேட்டேனே
எங்கே என்றே பார்த்தேனே
கனிந்த  கொய்யாப் பழமருகே
கரிய குயிலைக் கண்டேனே
கனைத்தே அருகில் நான்செல்ல
கனியைச் சுவைக்கும் பணிமறந்து
பனியாய் விலகிப் பறந்தாங்கே
பாடும் குயிலோ மறைந்ததுவே!



- தமிழ்நெஞ்சம் அமின்

# ஹைக்கூ

1
இலைகளின் மேல் வெளிச்சம்
தொலைந்து போகின்றது
பனித்துளி

2
சண்டை போடும் பறவைகள்
மரத்திலிருந்து விழுந்து பறக்கின்றன
இறகுகள்

3
சில நேரங்களில்
மலரை விட வண்ணமாய்
பழுத்தயிலை

4
குறும் ஆட்டை //
விழுங்கியதும் அமைதியாகின//
முதலையும் குளமும்...//

5
சத்தமிட்டபடி
குளத்தில் மூழ்கியது
எறிந்த கல்

6
வானவில் வண்ணம்
சிறகுகளில் சுமந்த படி
தட்டான் பூச்சி

7
துடுப்பிடும்
படகுடன் தொடர்கின்றது
குளத்தின் சலனம்



8
கழுகின் அலகில்
துள்ளியபடி பறக்கின்றது
கொக்கு பிடித்த மீன்

9
பாலத்தைக் கடக்கின்றேன்
சலனமின்றி இருக்கின்றது
வறண்ட படுகை

10
இழுக்கும் மீன்//
வானத்தில் வளைந்தபடி//
வளையத்திற்குள் தூண்டில்//

11
சாலையை கடந்து செல்கின்றது
மின்சாரக் கம்பியில் ஏறிய
காட்டுக்கொடி

12
தெளிந்த ஓடையில்
ஆழத்தில் தொடர்கின்றது
நகரும் படகின் நிழல்

13
மண்டியிட்டு மேயும் ஆடு
தலை குனிந்து கொள்கின்றது
ஆவாரம் பூ

14
வலை விரிக்க
மரம் ஏறுகின்றது
இலையுடன் தரையிறங்கிய சிலந்தி

15
சங்குகளை சேகரிக்கின்றேன்
சட்டை பைக்குள் ஊருகின்றது
நத்தை

16
பறக்கும் விமானம்
பார்க்கும் சிறுவனின் கையில்
ஒரு பறவையின் சிறகு

17
மழையில் நனைந்த
பற்றுக் கொடியில் வரிசையாய்
சூரியன்கள்

**ஷர்ஜிலா யாகூப்**

# என்றும் எம் மக்கள்!

இவ்வுலகை இரசிக்க
பிறந்தவன் நான்:
என் உலகில் கலவரங்கள்
ஒழிவதற்கே - நான்
மானுடம் பாடி மகிழ்கிறேன்!

நீ ஆணா பெண்ணா
அவசியமில்லை,
உன் சாதியும் மதமும்
அடையாளமில்லை;

நீ ஏழையா பணக்காரனா
பாகுபாடில்லை,
உன் மொழியும் நாடும்
பிரிவுகளில்லை;

நீ மனிதனா மிருகமா
யோசிக்கவில்லை,
உன் நிறமும் குணமும்
இணைந்தவையில்லை;

நீயும் நானும்
ஒன்றெனக் கண்டேன்,
வயிறும் பசியும்
இருக்கும் எவரும்
எம் மக்கள் என்றெண்ணம்
கொண்டேன்!!

**வெ.ஹேமந்த் குமார்,**
ஈரோடு





# குறும்பாக்கள்

*

உயிரும்
உடலும்
இன்னும்
ஒட்டிக்கொண்டுதான்
இருக்கிறது.

அது எத்தனை நாட்கள்
நீடித்திருக்கும்
என்று தெரியாது.

மரணம்
எல்லோருக்கும்
கிடைக்கும்.

எனக்கும் கிடைக்கும்.
அதுவரை காதலிப்பேன்
இந்த பிரபஞ்சத்தை.

*

என் காதலை
உன் முன் நிறுத்துகிறேன்
ஏற்றுக்கொண்டாய்

உன் பெற்றோர்கள்
முன்நிறுத்துகிறேன் ஏற்றுக்
கொண்டார்கள்

இப்போது எங்கிருந்து வந்து
நிற்கிறது "சாதி"

**- மணவை கார்னிகன்**



# ஆறுகள்

மெல்லென ஆறுகள் ஓடும் - அது
மெல்லிய இன்னிசை போடும் - அவை
மெதுவாய்வர நிலமோங்கிட
விரைவாய்பயிர் புதுவேரொடு
மேவும் தளிர் தாவும்
சில்லெனத் தென்றலும் பாடும் - அது
சீண்டிடப் பூக்களும் ஆடும் -அவை
செழிப்பாகிட எழிலோங்கிட
அழகாயொரு நிலைகாணவும்
செய்யும் நிலை உய்யும்
கல்லெல்லாம் தேய்ந்துமே போகும் - அது
காண்போரின் உள்ளத்தில் நோகும் - அது
கடிதானதை எளிதாகவும்
உருமாறவும் நிலையேகும்
காட்சி அங்கு மாட்சி

செல்வழி எங்குமே ஈரம் - அங்கே
செம்மையைக் கண்டிடும் ஓரம் - தினம்
சிதறாமலும் நடைபோட்டிட
அருகாமையில் பயிரோங்கிடச்
செம்மை நீங்கும் வெம்மை

- நிர்மலா சிவராசசிங்கம்

# தன்முனைக்கவிதைகள்

1
நினைவுகளால் என்னை
நிரப்பிக் கொண்டிருக்கிறாய்
இதோ இந்தத் தனிமை
எனை என்ன செய்திடும்

2
நின் ஈர விழிகளில்
வீர மொழி படித்தேன்
என்னை எழுப்பி நிறுத்துகிறது
ஒரு தளபதியின் தைரியத்தோடு

3
அத்தி பூத்தாற் போல
அவள் சிரித்து வைத்தாள்
என் மன வெளியெங்கும்
எத்தனை காதல் விருட்சங்கள்

4
ஐம்புலன் அடைக்கும் அடர்பனி
அரசுப் பேருந்தில் பயணம்
சூடேற்றி வேடிக்கை பார்க்கிறது
செல்பேசியில் உன் வார்த்தைகள்

5
காலி தேநீர் கோப்பையுடன்
காத்திருக்கிறேன் நான்
எப்போது நிரப்புவாய்?
ஆவி பறக்க காதல்

6
வரமா?சாபமா?
நீ எனக்கு
இன்பத்தை பொழிகிறாய்
துன்பத்தை துவட்டுகிறாய்

7
இருளும் ஒளியும்
உன்னாலெனக்கு ஒன்றுதான்
இருளில் கனவுகளாய்
ஒளியில் நினைவுகளாய்

8
அக்கரைக்கு எக்கரையும்
பச்சையாய் மட்டுமே
உன்னிதய தொலைநோக்கியில்
புள்ளிகளாய் மட்டும் என்சிவப்புகள்

9
நீயொரு விளங்காப் புதிர்
என் புரிதலதில் சிறுதுண்டே
மீதத்தைப் புரிந்து கொள்ள
யுகங்கள் பல வேண்டுமெனக்கு

10
நீ ஒரு ஞானதேவதை
வரங்களால் எனை வசீகரிக்கிறாய்
நான் ஒரு ஞானசூனியன்
அவைமதிப்புணராமல்விழிக்கிறேன்

**ராஜூ ஆரோக்கியசாமி**
திருச்சி - தமிழ்நாடு

# நெஞ்சில் நிறைந்தவள்

வானில் நீந்தும் வெண்ணிலா - என்
வாழ்க்கையில் அவளோ என்னிலா
தாழ்விலும் உயர்விலும் என்னை அனைத்து
தரமாய் உயர்த்தும் பெண்ணிலா

சிந்தும் சிரிப்போ முகத்திலே - சில
சில்லறை உதிரும் நிலத்திலே
அவளின் ஆசை என்னை நாளும்
ஆனந்தம் கொள்ளுது நெஞ்சிலே

பஞ்சுப் பாதங்கள் நடக்கையில் - என்
நெஞ்சம் பதறும் இயற்கையில்
கொஞ்சும் அவளை என்னை மறந்து
அஞ்சித் தொடுவேன் ஆசையில்

நீ தான் நெஞ்சில் நிறைந்தவள் - முழு
உலகமே என்னுள் தந்தவள்
பழகப் பழக என்னுள் நிறைந்து
பாசத்தை எதுவென சொன்னவள்

**ராஜ்பாரதி**

# மனிதம் காப்போம்

– சுந்தர் ராவ்

ஒரு ஊரில் பெரிய கோயிலில் கோபுரத்தில் நிறைய புறாக்கள் வாழ்ந்து வந்தன.

திடீரென்று கோயிலில் திருப்பணி நடந்தது அதனால் அங்கு வாழ்ந்த புறாக்கள் வேறு இடம் தேடி பறந்தன.

வழியில் ஒரு தேவாலயத்தை கண்டன அங்கு சில புறாக்கள் இருந்ததன அவைகளோடு இந்த புறாக்களும் அங்கு குடியேறின, சில நாட்கள் கழித்து கிறிஸ்துமஸ் வந்தது. தேவாலயம் புதுப்பிக்க தயாரானது இப்போது இங்கு இருந்து சென்ற பறவைகளும் அங்கு இருந்த பறவைகளும் வேறு இடம் தேடி பறந்தன.

வழியில் ஒரு மசூதியை கண்டது அங்கும் சில புறாக்கள் இருந்தன. அவைகளோடு இந்த புறாக்களும் குடியேறின. சில நாட்கள் கழித்து ரமலான் வந்தது வழக்கம் போல் இடம் தேடி பறந்தன.

இப்போது மூன்று இடத்திலும் உள்ள புறாக்களும் கோயிலில் குடியேறின. கீழே மனிதர்கள் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் வெட்டி சாய்த்துக்கொண்டு இருந்தனர்.

ஒரு குஞ்சுப்புறா தாய் புறாவிடம் கேட்டது ''ஏன் இவர்கள் சண்டை போடுகிறார்கள் ?'' என்று...

அதற்கு அந்த தாய் புறா சொன்னது "நாம் இங்கு இருந்த போதும் புறா தான், தேவாலயத்துக்கு போனபோதும் புறா தான், மசூதிக்கு போன போதும் புறா தான். ஆனால், மனிதன் கோயிலுக்கு போனால் 'இந்து' , சர்ச்க்கு போனால் 'கிறிஸ்தவன்', மசூதிக்கு போனால் 'முஸ்லிம்' என்றது.

குழம்பிய குட்டி புறா "அது எப்படி? நாம் எங்கு போனாலும் புறாதானே அதுபோல தானே மனிதர்களும்'' என்றது.

அதற்கு தாய் புறா "இது புரிந்ததனால்தான் நாம் மேலே இருக்கிறோம், இவர்கள் கீழே இருக்கிறார்கள்'' என்றது.

மதம் என்பது மனங்களை நெறிப்படுத்தத் தானேயன்றி மனிதத்தைக் கூறு போட அல்ல. ஆகவே மனிதம் காப்போம். ■



# இனியாவது விழித்தெழுவோம்...

அந்தப் பசுமை வயலெங்கும்
காற்றாலைகள் நிறுவப்பட்டன..
ஆங்காங்கே உயர் அழுத்த
மின் கோபுரங்களும் நின்றன !
எஞ்சிய நிலத்தில் உழுது பயிரிட
உயிரைப் பணயம் வைத்து
விவசாயி முன்னேறுகிறான் !
அறிவியல் வளர்ச்சி தேவைதான்.
தரிசு நிலங்கள், மலைப்பிரதேச
நிலங்களை தேர்வு செய்ய
தவறுகிறார்கள் !
உண்ணும் உணவில் ரசாயன
உரங்களின் வாசம்
மரபணு மாற்றப்பட்ட பழங்கள்
உலா வருகின்றன
இயற்கை விவசாயம் மறந்தபடி
மக்களின் நல்வாழ்வு
நொறுங்கும் அவல நிலை !
சுற்றுச்சூழல் தினம் சர்வதேச அளவில்
கொண்டாடி என்ன பயன் ?
சற்றும் உணராத போக்குகளில்
பயணிக்கும் மாந்தர்தம் நிலைதான்
கேள்விக்குறியாகி முன்னே நிற்கிறது !
இனியாவது விழித்தெழுவோம் ...
இளைய தலைமுறை சிறக்கட்டும் !

**- கா.ந.கல்யாணசுந்தரம்**

# பொறுமையை போற்றி காப்போம்

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.**

விளக்கம்

நற்குணங்கள் நம்மை விட்டு நீங்காதிருக்க வேண்டுமானால்
நாம் பொறுமையை போற்றி காத்தல் வேண்டும்.

வாழ்க்கையுடன் பொருந்தும், நம் வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒன்று பொறுமை ஆகும். ஆனால் இதுவோ யாரிடமும் இருப்பதில்லை. முதலாவதாக ஒன்று நாம் செய்யும் சமையல் மற்றும் உணவில் உள்ளது.வேலைக்குச் செல்ல நேரமாகிறது என்பதால் எளிதில் செய்யக்கூடிய மேகி,பாஸ்தா போன்ற உணவுகளை செய்து அதையும் பொறுமை யின்றி வேகமாக சாப்பிட்டு வேலைக்குச் செல்கின்றனர்.இதன் மூலம் அவர்களுக்கு நேரமாகிறது என்ற பெயரில் மனஉளைச்சலும், உண்ணும் உணவும் சரியாக இல்லாததால் உடல்நிலை சரியில்லாமல் போகிறது.இதை நாம் பொறுமையுடன் சத்தான உணவுப் பொருட்களை செய்து சாப்பிட்டால் உடல் மற்றும் மனம் ஆரோக்கியமாக இருக்கும். இரண்டாவதாக நாம் செய்யும் வேலைகளில் பொறுமை.நாம் செய்யும் வேலைகளை சிந்தித்து நிதானமாக செயல்பட வேண்டும்.அப்போது வெற்றியுடன் நம் பெயரும் நிலைத்து இருக்கும். பொறுமையுடன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.அதை நாம் வேகமாக செய்யும் போது, வேலை எளிதில் முடியாது மன உளைச்சல் மற்றும் மனசோர்வு ஏற்படும்.மூன்றாவதாக மிக முக்கியமான ஒன்று நாம் பேசும் பேச்சில் பொறுமை மிக அவசியம் வேண்டும்.ஒரு வார்த்தை தவறினாலும் மனச்சங்கடம் மற்றும் மனவருத்தம் வந்துவிடும். யோகா,தியானம் போன்றவற்றை செய்வதன் மூலம் மனஅமைதியுடன் செயல்பட முடியும். இவ்வாறு நாம் அன்றாடம் செய்யும் செயல்களில் பொறுமையுடன் செயல்பட்டு வெற்றி அடைந்து நற்பெயரை வளர்ப்போமாக!

வாழ்க வளமுடன்

சௌ.வர்ஷா

## அன்பே வா அளவாய் ரசிக்கலாம்!

**(அறுசீர் விருத்தம்)**

நா.பாண்டியராசா

கணனே மணியே கற்கண்டே
காதல் பேச வாபெண்ணே!
பொன்னே மணியே பெண்வண்டே
பொழுதைக் கழிக்க வாபெண்ணே!
விண்ணே மண்ணே விண்விளக்கே
விடியல் தரவே வாபெண்ணே!
அன்பே அமுதே அடிக்கரும்பே
அளவாய்த் தொட வாபெண்ணே!

நெஞ்சே பஞ்சே எனதுயிரே
நெல்லிக் கனியே வாஉயிரே!
பஞ்சம் மில்லா நெஞ்சழகே
பசியைப் போக்க வாஉணவே!
அஞ்சும் வெட்கம் துறகிளியே
அள்ளிப் பருக வாகிளியே!
மஞ்சம் எடுத்து வாகிளியே
மனசைத் தின்று போகிளியே!

குடையின் அழகைத் திறமயிலே
குனிந்து ரசிக்கத் தான்மயிலே!
மடையைத் திறந்து வைஉயிலே
மழையை நிரப்ப தான்மயிலே!
உடையை துறக்க செய்உறவே
உணர்வைச் சிரிக்க வைஉறவே!
கடையை மூடச் சொல்லழகே
கனியும் கசியும் தான்முன்னே!

# இலக்கியப் படைப்பில் இடம் பெறக் கூடாதவை

## ஜெ.கார்த்திக் - கரூர்

சமகாலத் தொழில்நுட்ப உலகில், ஒரு படைப்பாளர் தன் கருத்தை வெளியிடுவதற்கும் அதற்கானப் பின்னூட்டத்தைப் (Feed-back) பெறுவதற்கும் இடையிலான கால இடைவெளி மிகவும் குறைவு.

முகநூல் உள்ளிட்ட சமூக வலைத் தளங்கள் இத்தகு எளியமையாக்கத்திற்கும் விரைவுப் பயன்பாட்டிற்கும் வித்திடுகின்றன. பின்னூட்டத்தில் நேர்மறையான விமர் சனங்களை எதிர்கொண்டு தன்னுடைய படைப்பைத் திருத்தி மீண்டும் வெளியிடு வதற்கும், மேலும் அதன்மூலம் பெற்ற அனுபவப் படிப்பினை அடுத்து படைப் பாளன் அடுத்தடுத்துப் படைப் பவற்றில் தன் படைப்பாற்றலைச் செம்மைப்படுத்துவதற்கும் இத்தகு மின்னியல் ஊடகங்களின் வசதிகள் நிறைவான உதவியை அளிக்கின்றன. இத்தகுத் தொழில்நுட்ப வளர்ச்சி நமக்குக் கிடைப்பதற்கு முன்பான கடந்த நூற்றாண்டில், அச்சு இயந்திரப் பயன் பாட்டின் வளர்ச்சியால் விளைந்த அச்சாக்க இதழ்களின் பயன்பாடும், அச்சு நூல்களின் பயன்பாடும் அதிகமான செல்வாக்கோடு இருந்தன. வாசகர்கள் தங்களது பின்னூட்டங்களைத் தெரிவிக்க அஞ்சல் முறையமைப்பும் இருந்தது. இங்கே படைப்பாளிக்கும் வாசகருக்குமான உறவு நிலை ஓரளவு இடைவெளியை உடையதுதான். இருப்பினும் மிக நீண்டது இல்லை. இப்போது ஒரு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முந்தைய படைப்பாளர் – வாசகர் உறவுநிலைக்கு வருவோம். ஓலைச் சுவடிகளில் தான் படைப்புகள் அமைந்திருந்தன. எங்கோ ஒரு மூலையில் இருக்கும் படைப்பாளியை எங்கோ ஒரு மூலையில் இருக்கும் வாசகர் அணுகுவது, பின்னூட்டத்தைப் படைப்பாளிக்குத் தெரி விப்பது, என்பதெல்லாம் மிகமிகக் கடினமானதாகவும் சவால் நிறைந் திருந்ததா கவும் அந்தக் காலத்தில் இருந்தது. இலக்கிய, இலக்கணங்களைக் கரைத்துக் குடித்தவரால் மட்டுமே அப்போது இலக் கியப் படைப்பு எழுதி வெற்றிபெற முடியும் என்றிருந்த காலமும் அதுதான். கற்பனை வளம், சொல்லாட்சி, சமூக விழுமியங்கள், ஆவணப்படுத்துதல் எனப் பற்பலவற்றைக் கொண்ட படைப்பாகக், கண்டிப்புடன் இருக்கவேண்டியதாகவும் இருந்தது. கூடுதலாக, ஓலைச்சுவடியில் எழுதப்படுவதால், திருத்தம் செய்து வெளியிட அதிகக் காலமும், செல்வமும் விரயமாகும் என்கின்ற காலச்சூழல் அன்றிருந்தது. இன்று வெளியாகும் படைப்புகளில் குறை, தவறு நேரிட்டால் மீண்டும் மீள் பதிப்பு செய்ய ஏதுவான தொழில் நுட்பங்களும், ஓரளவு பொருளாதார நிலையும் இன்று உள்ளது. ஆனால் இது போன்ற வசதியற்ற ஓலைச்சுவடி இலக்கியக்காலத்தில், எழுதிய பின்பு விளையும் குறைபாட்டு விமர் சனங்கள் எழுவதைத் தடுக்க, தமிழில் தோன்றிய (கிடைக்கின்ற நூல்களில்) முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் படைப்பாளருக்கு ஆலோசனைகள் சில வற்றை வழங்கியிருக்கின்றது. அதாவது ஒரு இலக்கியப் படைப்பின் கட்டமைப்பு முறையில் எழக்கூடிய குறைபாடுகளை விளக்கிக் கூறுகின்றது. அவற்றை இங்கு பார்ப்போம்.

சிதைவு எனப்படுபவை வசை அற நாடின்
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்,
குன்றக் கூறல், மிகை படக் கூறல்,
பொருள் இல கூறல், மயங்கக் கூறல்,
கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்,
பழித்த மொழியான் இழுக்கம் கூறல்,
தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்,
என்ன வகையினும் மனம் கோள் இன்மை,
அன்ன பிறவும் அவற்று விரி ஆகும்
(தொல்காப்பியம் நூற்பா 1600)

ஒரு நூலில் எவையெல்லாம் இருக்கக்கூடாது என்று விளக்கமாகவே மூவாயிரம் ஆண்டுக்கு முன்பாக எழுதப் பட்ட இப்பாடலில், பத்துவகையான சிந்தனைகளை அளிக்கின்றது. இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

1. கூறியது கூறல் : நாம் எழுதும் படைப்பில் ஏற்கனவே கூறிய ஒரு கருத்தைத் திரும்பத் திரும்பக்கூறுவது தவறாகும். இது வாசகருக்குச் சலிப்பை ஏற்படுத்தும்.
2. மாறுகொளக்கூறல் : எழுதிய படைப்பில், ஏற்கனவே கூறிய ஒரு கருத்துக்கு மாறாக அதே படைப்பில் இன்னொரு கருத்தை மாற்றிக் கூறுவது. இதுவும் நூலில் இடம் பெறக்கூடாது. கருத்தில் நிலையில்லாமல் மாறி மாறிப் பேசுவோரை இங்கு நினைவில் கொள்ளலாம்.
3. குன்றக்கூறல்: படைப்பில், கூற வந்தக் கருத்துக்களை முழுமையாகக் கூறாமல் அரைகுறையாகச் சொல்வதும் குற்றமே!
4. மிகைபடக் கூறல் : சொல்ல வந்தக் கருத்தை தேவையற்ற கருத்துக்களோடு சேர்த்து மிகைப்படுத்திக் கூறுவது இலக்கியப் படைப்பில் தவறாகும். பக்கத்தை நிரப்பும் வீண் வேலை இது என்ற விமர்சனமும் இதனால் எழும்.
5. பொருள் இல கூறல் : பொருள் இல்லாதவற்றை அதாவது எழுதுகின்ற படைப்பிற்குப் பயனற்றவற்றைக் கூறுதலும் வீண்தான்.
6. மயங்கக் கூறல் : படைப்பில் கூறப்படும் செய்திகளும், சொல் அமைப்புகளும் தெளிவில்லாமல் குழப்பம் ஏற்படுத்துகின்றவகையில் இருத்தல் என்பது படைப்பாளனின் தெளிவற்ற மனநிலையை வெளிப்படுத்திவிடும். படைப்பாளனின் தரமும் மங்கிவிடும்.
7. கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல் : இலக்கியப் படைப்பாளிகளின் வெற்றியே வாசகர்களை மையமிட்டதும் அவர்களுக்குத் தன்னுடைய கருத்துகள் சென்று சேர்வதிலும் தான். எனவே வாசகர்களுக்குப் பயனற்றவற்றையும், வாசகர்களுக்கு முரணானவற்றையும் இலக்கியத்தில் அமைத்துவிடக்கூடாது.
8. பழித்தமொழியான் இழுக்கம் கூறல்: படைப்பில் சொல்லுகின்ற ஒரு கருத்தின்மீது வீண்சொற்களைக் கூறி இழிவு உண்டாக்குதல் கூடாது. அதாவது எழுதும் படைப்பில் எடுத்துக்கொண்ட கருத்தினை நேர்மறை விமர்சனம் செய்யவேண்டுமே அன்றி, இழிவானக் கருத்துக்களை வேண்டுமென்றே வலிந்து திணித்துக் கூறக்கூடாது.
9. தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்: இலக்கியத்தில் வர்ணனைகளையும் கற்பனைகளையும் கடந்த உலகியல் உண்மைகளயும், சமூக நிகழ்வுகளையும் பதிவு செய்தல் என்பது மிக இன்றியமையாதது. உண்மைகளை வெளிக்கொணருவதாக இலக்கிய ஆக்கங்கள் இருத்தல் வேண்டும். மனம் போன போக்கில் ஒரு கருத்தை எழுதுவதும், எதையும் திறனறிந்து பார்க்காமல் தன்னளவில் மட்டுமே இதற்கு இதுதான் பொருள் என்று நினைத்து எழுதுவதும், மிக மிக அபத்தமானதும் ஆபத்தானதுமாகும்.
10. என்ன வகையினும் மனம் கோள் இன்மை : படைப்பானது தெளிவான அமைப்பியல்பு இல்லாமலும், படைப்பாளிக்கும் வாசகருக்கும் மனம் ஏற்கும் படியான கருத்துகள் இல்லாமலும் அமைந்திருக்குமானால் அது பயனற்ற இலக்கியப்படைப்பாக மாறிவிடும்

மேற்கண்டபத்துவகையானகருத்துக்கள் அனைத்தும் ஒரு இலக்கியப் படைப்பானது எப்படி அமையக்கூடாது என்பதற்கானத் தொல்காப்பியரின் விமர்சனப் பார்வை ஆகும். இன்றளவிலும் புதுப்புது சிந்தனைகளோடு இலக்கிய உலகில் தடம் பதிக்க எண்ணும் இலக்கியப் படைப்பாளர்களுக்கும், இனி எழுதவுள்ள இலக்கியப் படைப்பாளிகளுக்கும் என்றும் கைகொடுக்கும் வழிகாட்டியாக இக் கருத்துக்கள் திகழும் என்பதில் ஐயமில்லை. தரமான இலக்கியப் படைப்புகளை நாம் படைத்துத் தமிழ் வளம் சேர்க்க விழைகிறேன்.

# ஏதுமில்லை

இது கதையல்ல.
நிஜமுமல்ல.
கனவுமல்ல. கற்பனையுமல்ல.

நினைவுமல்ல. நிகழ்வுமல்ல.
ஆனாலும் ஏதோவொன்றில் என்
எண்ணமாகி வண்ணமாகின்றது....
கவிதை (கிறுக்கல் )

எனக்குள் ஏதுமில்லா தருணங்களில்

சில வாக்கியங்களில் ,
சில வரிகளில்,
சில எழுத்துகளில் ,

என் எண்ணம்
இன்பம். துன்பம் துயரம் வெறுமை
கண்ணீர்  கனவு
இவையாவும் ஒரு வரியில் வலி மறந்து
மொழியாகின்றது

எல்லாமிழந்து
அனாதையாகிய உணர்வுகள்

அழுது தீர்க்க துணிவில்லாது
வரைந்துப்போகின்றது
எனக்காக என் எண்ணம்...

அப்போதே தான்
இவைகளை ரசித்த சிலர்
எனக்காகவே எழுதியதா?

என் கதை படித்த மாதிரி
நான் நினைத்த தொனியில்
இருக்குதே?

என் பாழடைந்த நாட்களை மீட்டனவே
அவரவர் அவர்களது நிலைப்பாட்டில்
அப்போது எனக்கானதென
ஏதுமில்லையே

மீண்டும் பூஜ்ஜியமாகின்றேன்
வரிகளோடு

**ரிம்ஸா டீன்**

# ஹைக்கூ

1
பட்டமரம் உதிர்கிறது
ஆற்று நீரில்
பறவையின் இறகு

2
உயர்ந்த கோபுரம்
உடையாமல் விழுந்து கிடைக்கிறது
மழைநீர்

3
சொன்னாலும் கேட்பதில்லை
வீடு வரை வந்திருக்கிறது
கடற்கரை மணல்

4
குளத்து நீரில்
கோலம் போட்டு செல்கிறது
மழை

5
அப்பத்தா தாலாட்டு
கண்ணயர்கிறது
இரவு

6
அடர் வனத்தில் அடிவைக்கிறேன்
என்னை வரவேற்கிறது
தவளைச் சத்தம்

7
வெட்டியான் தோட்டத்து மல்லிகை
சூடிக் கொண்டிருக்கிறது
கருவறைச் சிலை

8
அறுந்துவிட்ட காலணி
நினைவுபடுத்துகிறது அப்பாவின்
வருமானம்

9
சிறுமியின் ஆட்டம்
கூடிக்கொண்டே இருக்கிறது
தட்டில் காசு

**- குமார் தர்மசீலன்**

# வாழ்தல் இனிது



நிஷா ரஹ்மான்

பேச்சுத் திறமை என்பது, எல்லோருக்கும் இருக்கிறது.

தற்காலத்தில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, மிகத் திறமையான பேச்சாளர்களாக திகழ்கிறார்கள்.

பிறந்து, கிட்டத்தட்ட இரண்டு வருடங் களில், தெளிவாக பேசக் கற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

ஆனால், வளர்ந்து வாலிப மடைந்து, வயது முதிர்ந்த நிலையில் கூட..எப்படிப் பேசவேண்டும் என்று கற்றுக் கொள்வதேயில்லை.

எங்கு, யாரிடம்,, எப்படி, என்ன பேச வேண்டும் என்பதை மட்டும் கற்றுக் கொண்டால், வாழ்வில் பல சிக்கல்களை தவிர்க்கலாம்.

எதற்கெடுத்தாலும் குறை கூறித் திரியாதீர்கள்.

ஒருவர் இல்லாத இடத்தில், அவரைப்பற்றி பேசுவதை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள்.

இரண்டு பேர் இருக்கும் இடத்தில் அவர்கள் சம்பந்தப்படாத விஷயங்களைப் பற்றியோ, மூன்றா வது நபரைப் பற்றியோ பேசாதீர்கள்.

ஒருவரிடம் குறையோ, தவறோ இருந்தால், அதை சம்பந்தப் பட்டவரிடமே கூறிவிடுவது சாலச் சிறந்தது.

அதை அவர்கள் திருத்திக் கொள்வதோ, அல்லது உங்கள் மீது கோபப்பட்டு விலகி விடுவதோ, அவர்களின் இஷ்டம். அந்த விவகாரம் அத்துடனே முடிந்து போகும்.

மாறாக, அதைப்பற்றி மற்றொரு வரிடம் பேசும்போது அது, இன்னும் ஒருவருக்கு பகிரப்படுகிறது. இப்படியே பலரது செவிகளையும் சென்றடைகிறது.

அதுவும் ஆளாளுக்கு, ஒவ் வொரு வடிவம் கொடுத்து, இல்லாத வற்றையும் இணைத்து, மிகைப் படுத்தி பல பேருக்கு சுவாரஸ்யமான செய்தியாகி விடுகிறது.

இதுபோன்று பலர் எத்தனை இழிவான செயலை தாம் செய்கிறோம் என்று உணராமல், விளையாட்டுத் தனமாக நடந்து கொள்கிறார்கள்.

பேசக் கற்றுக் கொடுங்கள், குழந்தைப் பருவத்தில் இருந்தே! அத் தோடு, யாரிடம், எப்படிப் பேச வேண்டும்

என்பதையும் கற்றுக் கொடுங்கள்.

வாலிப வயதை அடையும் போது வார்த்தைகளை பக்குவமாக கையாளும் முறையைக் கற்றுக் கொள்ளுங்கள்.

பக்குவம் என்பது அந்த வயதில் ஏற்படாவிட்டால், இனி எந்த வயதிலும் ஏற்படப் போவதில்லை.

நினைவில்வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு நண்பனிடம் பேசும் தொனியில், உங்கள் ஆசான்களிடம் பேச முடியாது. ஆசான்களிடம் பேசும் தொனியில் பெற்றோர்களிடம் பேச முடியாது.

நீங்கள் யாரிடம் பேசுகின்றீர்கள் என்பதை பொறுத்து, நீங்கள் பேசும் விதம் வேறுபடுகிறது.என்ன பேசுகிறீர்கள் என்பதை பொறுத்து, பேச்சின் தொனி வேறுபடுகிறது.

ஆசான்களிடம் பேசும் போது மரியாதையுடனும், பயபக்தியுடனும் பேசுங்கள். அதிகாரிகளிடம் பேசும் போது பணிவுடன் பேசுங்கள். குழந்தைகள் மற்றும் வயதானவர்களோடு பேசும் போது கனிவுடன் பேசுங்கள்.

உங்கள் பெற்றோர்களிடம் பேசும் போது, அன்புடனும்..அடக்கத்துடனும் பேசுங்கள்.. நண்பர்களோடு பேசும் போது தோழமையுணர்வோடு பேசுங்கள்.

பேச்சில் இத்தனை விதங்களா என ஆச்சரியப்படாதீர்கள். நீங்கள் எப்படிப் பேசுகின்றீர்கள் என்பதை வைத்தே, நீங்கள் கணிக்கப் படுகிறீர்கள்.

ஒருமுறை, அறிஞர் சாக்ரடீஸ் அவர்களின் மாணவர் ஒருவர் மிக அவசரமாக அவரிடம் ஒடி வந்தார். வந்தவர் “ஐயா.. உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்” என்றார்.

அவரோ.. ‘‘சரி சொல்லு பார்க்கலாம்’’ என்று கூறி விட்டு...‘‘ ஆனால், அதற்கு முன் நான் கேட்பதற்கு பதில் கூறு’’ என்றார்.

“முதலில் நீ சொல்ல வந்த விஷயம் என்னைப்பற்றியதா” எனக் கேட்டார். ‘‘இல்லை’’ என்றான் அம் மாணவன். “அப்படி என்றால் உன்னைப் பற்றியதா” எனக் கேட்டார். அதற்கும் இல்லை என்றே பதில் வந்நது.

“அப்படியானால் இதற்காவது பதில் சொல்... உனக்கோ ,எனக்கோ பயனுள்ள ஏதாவது விஷயமா” என்றார். மாணவன் தலை குனிந்தவாறு இல்லை என்றான்.

‘‘இதோ பார்.. உன்னைப் பற்றியும் அல்லாத, என்னைப் பற்றியும் அல்லாத, எனக்கும். உனக்கும் சம்பந்தமில்லாத எனக்கோ, உனக்கோ பயனளிக்காத ஒன்றைக் குறித்து, நாம் எதற்காக பேச வேண்டும்? அதற்காக நேரத்தை நாம் ஏன் வீணடிக்க வேண்டும்? போ.. போய் விடு.. இனிமேல் இப்படியான விஷயங்களை சுமந்து என்னிடம் வராதே” என்று கடிந்து கொண்டார் .

இதுவே ஒரு மூன்றாம் தர மனிதராக இருந்தால், பொழுது போக்க சுவாரஸ்யமான கதை கிடைத்திருக்கிறது என அலசி ஆராய்ந்திருப்பார்.

அறிஞர்களும், புத்தி ஜீவிகளும், இப்படியான பேச்சுக்களால் நேர காலத்தைப் வீணடித்தவர்கள் அல்ல.

எல்லோரிடமும், எல்லா வற்றையும் பேசிக் கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ, எல்லாவற்றையும்..எல்லோரிடமும் பேசாதீர்கள்.

கேட்டுக் கொண்டிருப்பவர் சில வேளை எரிச்சல் அடைவார்கள்.. சில வேளை சங்கடப்படுவார்கள்,.

அடுத்தவர் விஷயங்களில் ஆர்வம் காட்டுபவர் மட்டும்,. கண்களையும், காதுகளையும், அகலத் திறந்து கொண்டு தலையாட்டவும்,, கருத்து சொல்லவும் தயாராக இருப் பார்கள்.

நீங்கள் யாருடன் பேசினாலும், அவர்களது கண்களைப் பார்த்து பேசுங்கள். மனிதர்களின் மன உணர்வுகளை துல்லியமாகக் காட்டும் கண்ணாடி தான் கண்கள்.

ஆக, கண்களைப் பார்த்து பேசும் போது.. அவர்கள் உங்கள் பேச்சில் எந்தளவு அக்கறை காட்டுகிறார் கள்; எந்தளவு உங்கள் பேச்சை நம்புகிறார்கள்; பேச்சில் வெறுப்படைகிறார்கள்,கோபப் படுகிறார்களா என்பதையெல்லாம் உங்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

மற்றவர்களையும் பேசவிடுங்கள்.

நீங்கள் பேசும் போது கருத்தில் கொள்ள வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயம் நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்காமல்.. மற்றவர்களையும் பேச விடுங்கள்.

உங்கள் கருத்துக்களை அவர்கள் ஆதரிக்கிறார்களா அல்லது மாற்றுக் கருத்துகள் ஏதேனும் உண்டா என்பதை அறியக் கூடிய வழிமுறை அது.

ஒருசிலர் பேசும்போது, அவர்கள் மட்டும் பேசிக்கொண்டே இருப்பார்கள்.

கடுகதி ரயில் போலவே அவர்கள் பேச்சும் இடைவிடாது தொடரும்.

எதிரே இருப்பவர், ஏதாவது சொல்ல விரும்புகிறாரா, குறைந்த பட்சம், தான் பேசுவதை சரிவர புரிந்து கொள்கின்றாரா என்ற உணர்வு கூட அவருக்கு இருக்காது.

அடுத்தவரை பேசவிடாமல் நீங்கள் மட்டுமே பேசுவதானால், கண்ணாடிக்கு முன் நின்று பேசுங்கள். எதிரே ஒருவர் தேவையே இல்லை.

பேச்சில் தெளிவு, நிதானம் இரண்டுமே இல்லை எனில், நீங்கள் எவ்வளவு தேர்ந்த பேச்சாளராக இருந்தாலும் பயனில்லை.

உங்கள் பேச்சு ,மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும், தெளிவாகவும் இருப்பது அவசியம்.

அப்போது தான் உரையாடல்களில் அர்த்தம் இருக்கும். கோபமாக இருக்கும் போது, நீங்கள் பேசுவதை விட, மௌனமாக இருப்பதே சிறந்தது.

ஏனென்றால் கோபத்தில் கொட்டப் படும் வார்த்தைகள் மிகக் கடுமையாகவே இருக்கக் கூடும். அதை மீண்டும் அள்ளி எடுக்கவும் முடியாது.

கோபத்தில் நீங்கள் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் எதிரே இருப்பவரை உடைந்து போகச் செய்யும்.

அவரது உணர்வுகள் சிதைந்து போகக் கூடும். தன்மானம் தகர்க்கப்படக் கூடும்..

கோபத்தில் கொட்டப்படும் வார்த்தைகள் ,அனேகமாக முத்துக் களாக இருப்பதில்லை. அவை அமில மாகவே இருக்கும். அமிலம், யாரிடமும் அனுதாபம் காட்டாது.

அவசரத்தில் வார்த்தைகளை கொட்டி விட்டு, நிதானமாக நீங்கள் வருந்து வதால் பயனில்லை.

கோபம் என்பதும், மனித உணர்வுகளில் ஒன்று. கோபத்தில் மௌனமாக இருப்பதால், அதை பலப் படுத்த முடியும். மாறாக வார்த்தை களை வீசுவதால், அது உங்களையே பலவீனமாக்கி விடும்.

''நன்றாக சிந்தித்த பின்னரே உங்கள் நாவை அசையுங்கள்.'' நீங்கள் அவமானப் பட மாட்டீர்கள்» என்பது கிரேக்க பழமொழி.

யோசித்துப் பேசினால், நீங்கள் சரியானதை மட்டுமே பேசுவீர்கள்.

பேச்சில், மிகத் தாழ்வான பேச்சு மற்றவர் மனம் நோகப் பேசுவதே. எப்போதும் பேச்சில் நிதானத்தையும், கனிவையும் கையாளுங்கள். தப்பித் தவறி வார்த்தைகளால் எவரையும் காயப்படுத்தி விட்டால் ,உடனடியாக சம்பந்தப்பட்ட நபரிடம் மன்னிப்பு கோரி விடுங்கள். மன்னிப்புக் கோருதல், உங்களை ஒரு போதும் தாழ்த்தி விடாது.

மாறாக மற்றவர் உள்ளத்தில் உங்களை, உயர்ந்த நிலைக்கு கொண்டு போகும்.

சிலர் விஷம் தோய்ந்த கூரிய வார்த்தைகளை தேனொழுக பேசுவதில் வல்லுநர்கள். அப்படியான பேச்சு மற்றவர் மனதில் ஆறாத ரணமாக பதிந்து விடும். அந்தக் காயங்களுக்கு மருந்து கிடையாது. .ஆதலால், ஒவ்வொரு வார்த்தையும் யோசித்து பேசப்படவேண்டும்.

பேச்சில் நளினம் இல்லை என்றாலும், நாகரீகம் இருக்க வேண்டும். அன்பு இல்லை என்றாலும் அடக்கம் இருக்க வேண்டும். பணிவு இல்லாவிட்டாலும், பண்பு இருக்க வேண்டும்.

உங்களை யாராவது வார்த்தை களால், காயப்படுத்துவதை நீங்கள் விரும்புவீர்களா?

இதமான, இனிய பேச்சுக் களை விரும்பும், நீங்கள் இன்னொரு வருக்கும் அதைத் தானே தர வேண்டும்?

இறுதியாக, வார்த்தைகளில் மட்டும் அல்ல பேசும் தொனியில் கூட கவனமாகக் இருக்க வேண்டும்.

வார்த்தைகள் ,நல்லதாகவே இருந்தாலும், பேசும் தொனியில் நையாண்டித் தனம் இருந்தால். அது அழகான வார்த்தைகளையும் அசிங்கப் படுத்தி விடும்.

ஆகவே, பேசப்படும் வார்த்தை கள் எவ்வளவு முக்கியமோ, அதை விட பேசும் தொனியும் முக்கியம் தான் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

''ஒரு சொல் கொல்லும்''
''ஒரு சொல் வெல்லும்''
இனிது! இனிது !
வாழ்தல் இனிது!

நற்சிந்தனைகள்
இனியும் தொடரும்.

# செவிலியர் சேவை மானிடர்க்குத் தேவை

அன்பின் அடையாளம்
ஆக்கத்தின் முகவரி!
அன்னை போலானவள்
அருவருப்பு அற்றவள்!

அக்கறையாய்ப் பணியாற்றும்
அகம்முழுதும் கருணைதான்!
பக்கத்தில் தானமர்ந்து
பணியாற்றும் தேன்மனம்தான்!

ஈன்றவளாய் நம்மைதான்
ஈங்கவளே தாங்கிடுவாள்!
ஊன்றுகோலாய் உடனிருந்து
உதவிடுவாள் பாருங்கள்!

வெண்மதியாய் வலம் வருவாள்
வெள்ளைமயில் தேவதையோ?
புண்ணிங்கே ஆற்றிடுவாள்
புன்னகைக்கும் தாயவளோ?

"காயம்"பட்டக் காயங்களைக்
கனிவுடனே ஆற்றிடுவாள்!
நேயங்கொண்ட செயலாலே
நோய்தீர்க்கும் நேரிழையாள்!

அச்சம்தரும் தொற்றினால்
அருகில்வர அஞ்சுவரிடையே
அச்சமின்றி நெருங்கிடுவாள்
அன்பானச் செவிலியவள்!

தன்னலமே தான்மறந்து
தொண்டாற்றும் தேவதையை
இன்னுயிரைக் காப்பவளை
ஓய்விலாது சுழல்பவளை

கண்விழித்து நோய்தீர்க்கும்
பெண்ணிவளைப் போற்றிடுவோம்!
பண்ணிசைத்துத் தாள்பணிந்து
மனதார வாழ்த்திடுவோம்!!!

**முனைவர்.கிருஷ்ணதிலகா**





# "நிலவுக் காதலனின் நினைவுக் கோலங்கள்"

அந்த வானமகளை
காணும் போதெல்லாம்...

என் நெஞ்சத்து
வயல் வெளிகளில்
நிலநடுக்கங்கள்...

நொடிகள் தோறும்
ஆனந்த அத்துமீறல்கள்

வார்த்தைகளால்
வசியம் செய்து நான் வீசிய

அந்த வில்லங்க அம்புகளுக்கு
விடை கிடைக்கும் நாள்
எந்நாளோ?

விதியின் வீதிகளில்
அவளுடன் உலா போக.

படைத்தவன்
கண் அசைத்தால் தானே

பாவை அவள்
விண்ணைத் தாண்டி
மண்ணில் இறங்கிடுவாள்

காதல் கசாயம் தந்து
என் தாகம் தீர்த்திடுவாள்

**கவிஞர் அப்துல் நாசர்**
மலேசியா

## கைசேரும் காலம்

பூவே உன்னை தேடித்தானே
நானே வாடுறேன்

பூவே உன்னை நாடித்தானே
நானே பாடுறேன்

தேனே தேனே
உள்ளம் இனிக்கும் தேனே

உனை பார்க்கத்தானே
நானும் இங்கு வந்தேனே

முகத்தைப் பார்க்க முன்னால் ஏனோ
நானும் ஏங்குறேன்

முகத்தைப் பார்த்த பின்னால் ஏனோ
நீயும் மறையுறே

பேச்சைக் கேட்க முன்னால் ஏனோ
நானும் மயங்குறேன்

பேச்சைக் கேட்ட பின்னால் ஏனோ
நீயும் தயங்குறே

நான் திரியுறேன் உன்
பின்னால் திரியுறேன்

நான் எரியுறேன் உன்
நினைவால் எரியுறேன்

கண்ணா உன்னை சேரத்தானே
நானும் ஏங்குறேன்

குடும்ப சூழல் நினைத்தால் தானே
நானும் மறையுறேன்

அன்பே அன்பே உன் விம்பம்முன்பே
ஊமையாய் நானே ஆகியே போனேனே

முகத்தைப் பார்க்க முன்னால்
நானும் வாடுறேன்

முகத்தைப் பார்த்த பின்னால்
நானுந் தேயுறேன்

காலம் கூடுமோ நெஞ்சே
கைசேர நாளாகுமோ

உயிரே நானே உன்னோடு தானே
காலம் நூறும் வாழ்வேனே

கலங்காதே கண்ணே
கைசேரும் காலம்
கனகெதியில் நேரும்

**பிரிய நிலவன் செகா**
சம்மாந்துறை

## வழி சொல்லு

உன்னை நினைச்சு நினைச்சு
வரி எழுதி எழுதி
என் கைதான் களைச்சிடிச்சே

உன்னைக் கடந்து போக
நெஞ்சம் வேறவழியுமின்றி
துடிப்பைக் குறைச்சிடிச்சே

காதல் சொன்ன நொடியில்
கலைஞ்சு போன பூங்கொடி

உன் நினைப்புத்தான்
போகையில உன்ன மறக்கத்தான்
முடியவில்ல

உடன் வந்து உயிர்பாதி நீ தந்தா
என்கூட காலம்பூரா நீ வந்தா

அதிலென்ன வெட்கமடி
நான் தருவேன் சொர்க்கமடி

ஏரிக்கரையோரம் ஏர் வச்சு உழுதா
யாருக்கு போகமடி
இதில் யாரிங்கே பாவமடி

உன் நினைப்பில்
தவிக்கிறேன் நான் இங்க

உன் நினைப்பதை தவிர்க்கிறேன்
நானும் மெல்ல


நீயும் ஒரு முடிவ சொல்லிட்டுப்
போனா
என்னை வேணாமுன்னு
தள்ளிவிட்டுப் போனா
மறப்பனா உன்னை நானும் புள்ள
மறுபடி வருவேன் காதல் சொல்ல

ஆண் கண்ணோரம் நீர் கசிஞ்சா
பெண்விசைத் தாக்கமடி
உன் இதழோரம் அந்த
வார்த்தை மொழிஞ்சா
தோரணம் விண்திசை பார்க்குமடி

**- பொயட் ராவணா**

# நல்வழிப்படுத்தும் மதங்கள்!

**நிலு**
பண்டாரவளை



நெடுநாளாக பல இடங்களில் வாசிக்க நேருகையில் எனை அறியாமல் நான் சிந்திக்கும் ஒரு விடயம்

நாம் வளர்ந்து வரும் தலைமுறை, சாதி மத பேதங்கள் நாம் பார்க்கவில்லை எனும் பொருள்பட வரும் செய்திகளே.

உண்மையில் இது எந்தளவிற்கு சாத்தியப்பட்டுள்ளது என்பதில் எனக்கு பாரிய ஐயப்பாடு உண்டு.

மதங்கள் என்பது எனை பொறுத்தவரை மனிதர்களை நல்வழிப் படுத்தவே ஒழிய நடுத்தெருவில் இறங்கி என் மதம் பெரிதா? உன் மதம் பெரிதா? என சண்டையிடுவதற்கல்ல.

பலர் இங்கே தம் மதத்தை உயர்த்தியும் பிறமதங்களை தாழ்த்தியும் கதைப்பதையும், எழுதுவதையும் காண்கிறேன்.

ஒருவன் நம் மதத்தை தாழ்வாக கதைத்தால் பதிலுக்கு நாம் அவன் மதத்தை அடியாழம் வரை தேடி குறைகண்டு விமர்ச்சிக்க தொடங்கிவிடுகிறோம்.

இதில் என் மதம் என்றால் மூட நம்பிக்கை உன் மதம் என்றால் மதப்பற்றா? என கேள்விவேறு.

இது ஒரு பூமராங் போல நம்மையே நோக்கி வருவதை ஏன் உணர மறுக்கிறோம் என்பதை நானறியேன்.

அவரவர்க்கு என்று தனிக்கலாச் சாரம் ,பண்பாடு என அனைத்தும் உண்டு.

அவரவர் மதத்தை பின்பற்ற இங்கு யாருக்கும் தடை இல்லை.

அதுபோல் பிறமதங்களை விமர்சிக் கவும் நமக்கு எந்த உரிமையு மில்லை.

ஒருவன் நம் மதத்தை தவறாய் கதைத்தால் அவன் பகுத்தறிவு அவ்வளவுதான் என கடந்து விடுங்கள்.

பதிலுக்கு நாம் விளக்கமளித்தல் என்பது சேற்றில் கால் வைப்பதற்கு சமனானது.

மரியாதை கொடுத்தால் தான் மரியாதை கிடைக்கும்.

பிறமதங்களை மதிப்போம். நம் மதத்தை துதிப்போம். கடவுளை விமர்சிக்கும் அளவிற்கு நாம் என்ன அவ்வளவு பெரிய படைப்பாளியா?

சிந்தித்து செயலாற்றுவோம். .

## என் மனக் கண்ணாடி வழியே

நிலைக் கண்ணாடியை
நான் காணும் போதெல்லாம்
நிலையான
உன் புன்னகையினையும்.

நீ பொழிந்த
நிகரில்லா அன்பினையும்
என்னுள்
காண்கிறேன் அம்மா!

நித்தமும்
உன் நினைவுகளுடனே
மௌன ராகம்
பாடிக்கொண்டிருக்கிறேன் அம்மா!

ஆன்மாவாய்
என்னை ஆசிர்வதித்துக்
கொண்டிருக்கும்
என் இனிய அன்னையே!

என் மௌனங்களுக்கு
விடை கூறிட
விரைந்து நீயும் வருவாயா?

சொல்ல மறந்த
உன் அன்புக் கதைகளை
என் காதோரம்
கொஞ்சம் சொல்வாயா!

**- கவிரசிகன்**

குறும்பாக்கள்

## மண் வாசம்...

ஒரு கையால்
தன் முகத்தையும்
மறுகையால்
தன் குழந்தையின்
முகத்தையும் தடவுகிறான்
பிறவியில் பார்வையை
இழந்தவன்.

பட்டினியால்
உறக்கமின்றி விழித்திருக்கும்
யாரோ ஒருவருக்காகவும்
உறங்காமல்
விழித்தே இருக்கிறது இரவு.

தள்ளிவிட்டாலும்
திரும்பத் திரும்ப அருகில்
வருகிறது அலைகள்.

நட்சத்திரங்களின்
வீட்டில் இருள்
என்பதேயில்லை.

பிடுங்கிய கிழங்கில்
ஒட்டிக் கொண்டு வருகிறது
மண் வாசம்.

தாயில்லாப் பிள்ளையின்
பசியைப் போக்க
எங்கோவொரு பசுவின்
மடியில் சுரந்து
கொண்டிருக்கும் பால்.

நதியைத்
தேடிப் போனேன்;
அது கடலைத் தேடிப்
போயிருந்தது.

அம்மா இல்லை
அப்பாவைத் தெரியாதென்று
சொல்லும் போது மட்டுமே
அம்மா அப்பா என்ற
இரு வார்த்தைகளும்
வாயில் வந்து போவதைத் தவிர
அவர்களை வேறெதற்கும்
பயன்படுவதில்லை
அனாதைக்கு.

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602



## தாயின்றி என் தனிமை!!!..

கண்ணீர்த் துளியை
துடைத்திட யாருமில்லை...
தெரிந்தும்,
சிலருக்கு இங்கு நேரமில்லை!!!!..

துடிக்கும் இதயத்தை
நிறுத்த முடியவில்லை.

துடிப்பதே உனக்காகத்தான் - என
தெரிந்ததால்
அதை நிறுத்த மனமுமில்லை!!!!..

ஏங்கிடும் மனதிற்கு
தெரியவில்லை...
தான் - ஏங்கிடும் ஏக்கத்திற்கு
விடைதான் ஏதுமில்லை!!!!..

பாதைகள் துளியும்
குறையவில்லை.
தனிமையின் தூரத்திற்கு
ஏதும் எல்லையில்லை!!!!...

கண்ணீரின்,
ஈரம் இன்னும் காயவில்லை.

இருந்தும், உனை மறந்து வேறொரு
வழிதேட தோன்றவுமில்லை!!!!..

உள்ளத்தின் காயங்கள்
இன்னும் ஆறவில்லை.
.
பக்கத்தில் அணைத்து முத்தமிட நீ(தா)
யுமில்லை!!!!..

கனவிலும் காட்சிகள் முடியவில்லை.
அறிந்தேன், - இதுவே தனிமையின்
கோர எல்லை என்று!!!!.

இளம் தாரகை இவள்
**ஷஹ்னா ஸப்வான்**

## வாழ்தலின் தத்துவம்

ஒரு காதல் போதுமாயிருக்கிறது
வாழ்வில் தெளிந்துகொள்வதற்கு.

ஒரு பயணம் போதுமாயிருக்கிறது
வாழ்வில் மகிழ்ச்சி கொள்வதற்கு.

ஒரு புன்னகை போதுமாயிருக்கிறது
வாழ்வின் பெறுமதி அறிவதற்கு.

ஒரு பிரச்சினை போதுமாயிருக்கிறது
வாழ்வை வெறுத்து ஒதுங்குவதற்கு.

ஒரு துன்பம் போதுமாயிருக்கிறது
வாழ்வுபற்றி பயம் கொள்வதற்கு.

ஒரு பரிசு போதுமாயிருக்கிறது
வாழ்வின் அன்பை அறிந்துகொள்வதற்கு.

ஒரு கடன் போதுமாயிருக்கிறது
வாழ்வில் நம் நிலையை தெரிவதற்கு.

ஒரு நட்பு போதுமாயிருக்கிறது
வாழ்வை நமக்கு படிய வைப்பதற்கு.

ஒரு பகை போதுமாயிருக்கிறது
வாழ்வில் நமக்கு பாடம் சொல்வதற்கு.

ஒரு அதிகாரம் போதுமாயிருக்கிறது
வாழ்வை நமக்கு வசதியாக்குவதற்கு.

ஒரு போதை போதுமாயிருக்கிறது
வாழ்வில் நம் பாதை மாறுவதற்கு.

ஒரு ஆசை போதுமாயிருக்கிறது
வாழ்வை விட்டு நாம் விலகுவதற்கு.

ஒரு கொள்ளை நோய் போதுமாயிருக்கிறது
வாழ்வின் அழிவை விபரிப்பதற்கு.


ஒரு கலவரம் போதுமாயிருக்கிறது
வாழ்வின் ஒழுக்கம் பற்றி போதிப்பதற்கு.

ஒரு அனர்த்தம் போதுமாயிருக்கிறது
வாழ்வின் இழப்பை நமக்கு
உணர்த்துவதற்கு.

ஒரு பிறப்பு போதுமாயிருக்கிறது
வாழ்வதே ஒரு வரம் என உணர்வதற்கு.

ஒரு மரணம் தான் போதுமாயிருக்கிறது
வாழ்வை முழுமையாய் புரிந்துகொள்வதற்கு.

**- பிரகவி.**
(ஆர்.ஜே.பிரகலாதன் - உடுவில்)



# தாய்

சிறியவயதில்
தாயின் அருமை
புரியாது

பெரியோர் நமக்கு
தாயின் இழப்பு
பெரும் துயரே
இழவு வீட்டில்
உறவுகளுடன்
கூடுகிறோம்

உணவு பகிர
சொந்தங்கள்
வரிசையாக
நிற்கின்றார்
பகிர்கின்றார்

உடன் பிறப்புக்கள்
ஒன்று கூடி
தாயின்
வரலாற்றையும்
தியாகத்தையும்
இரக்கத்தையும்
பக்தியையும்
ஈகையையும்
அலசுகிறோம்

பாயில் நோயுடன்
வீழ்ந்த போதும்
தொண்ணூற்றி
ஒன்பது வீதமே
நாம் தாய்க்கு
கடமை செய்தோம்

நூறுவீதம்
பார்க்கவில்லை
என்ற ஈறு
மனதில் பெரும்
கூறுதான்

ஆனாலும் ஒரு
ஆறுதல்.

உலகில்
மன்னிப்பிற்கு
முதலிடம் தருபவள்
தாய் தானே

அந்த நம்பிக்கைதான்
ஆறுதல்!

**S.M. முபீன்**

# தனி ஆவர்த்தனம்

" மாமா... நாளைக்கு நீங்க ஜம்முன்னு சேவிங்கல்லாம் பண்ணிக் கிட்டு சூப்பரா புது ட்ரெஸ் போட்டுக்கிட்டு சோக்கா புது மாப்பிள்ள மாதிரி இருக்கணும்... சொல்லிட்டேன்.."

" வார்ரே... வா.. அப்டியாடா என் செல்லக்குட்டி.. சரி.. சரி.. நாளக்கி என்னா விசேசம்..? "

" ச்சீ... போங்க மாமா... "

"உன்ன விட்டுட்டு நான் எங்கடா போறது..?சொல்லு... நாளக்கி என்னா விசேசம்..? "

" ச்சீ... போங்க. மாமா.. .எனக்கு வெக்கமா இருக்கு..."

" வெக்கமா... எங்கிட்டயா...? உன் வெக்கத்தையெல்லாம் அப்பால. வெச்சுக்கலாம்... இப்ப. என்னா சேதின்னு சொன்னா நானும் உங்கூட. வெக்கப் படுவேன்... இல்ல..."

" ஏன் மாமா... அம்மா சொல்லலியா..? "

" இல்லியே... சரி நீ தான் சொல்லேன்.. அந்த சேதிய நீ சொன்னா எனக்கு பாஸந்தி சாப்ட்ட மாதிரி இருக்கும்.. சொல்லுடா... கௌசி... ப்ளீஸ்..."

" நாளக்கி... நாளக்கி... என்ன. பொண்ணு பாக்க வர்றாங்க..."

" என்னாது... உன்ன. பொண்ணு பாக்க வறாங்களா...? "

--- பத்தாயிரம் வோல்ட் மின்சாரத்தை சின்னச் சின்ன வார்த்தைகளால் எனக்குள் பாய்ச்சி விட்டு இரண்டு கைகளாலும் வெட்கத்தால் முகத்தை மூடிக் கொண்டு தன் அறைக்கு ஓடி விட்டாள் கௌசல்யா.

" டேய்... சுதாகர்... சுதாகரு.."

அடுக்களையிலிருந்து அக்காவின் குரல்.

" என்னக்கா..? "

" நாளக்கி நம்ம. கௌசல்யாவை பொண்ணு பாக்க..."

--பத்து டன் எடையுள்ள. பயங்கர. சம்மட்டியால் என் தலையில் ஆவேசமாகத் தாக்கும் உக்ர வார்த்தைகளை பேசி முடித்தாள் அக்கா.

**

கிராமத்திற்குகடைசியாய் செல்லும் பேருந்தில் சீந்துவாரின்றி ஈனஸ்வரத்தில் முனங்கிக் கொண்டிருக்கும் ராமராஜன் பாடல் போல் தனியாய்--தவித்து அலைந்து கொண்டிருக்கிறது.....
என் காதல்.



**- ஜென்ஸி**



# பஞ்சம் தீர்ந்ததும்...

கோடைக்காலம் சுட்டெரிக்க...
வயல்களெல்லாம்
வறண்டுபோய்க் கிடக்க...
மரங்களெல்லாம்
பட்டுப்போய்க் கிடக்க...
உச்சிவெயில் வாட்டியெடுக்க...
உழவுத்தொழில் உறங்கிகிடக்க...
உழவனோ
அழுது புலம்புகிறான்...

நீல வானமே
நித்தம் நித்தம்
இதைப் பார்த்துக்
கொண்டுதானே இருக்கிறாய்...!
கொஞ்சம் கூடவா
உனக்குள்
இரக்கம் வரவில்லை...?

கருணை நிறைந்த
மேகத்தாயே-உன்
கொடை மகள்
கோடை மழையைப்
படை வீரர்களுடன்
புவிக்கு அனுப்பி வை...!

எங்கள்
பஞ்சம் தீர்ந்ததும்
காற்றோடு சேர்த்துக்
கண்ணியமாக திருப்பி
அனுப்பி வைக்கிறோம்...!

**பாக்யபாரதி**
தருமபுரி

# படப்படக்கும் என் நெஞ்சம்

விளைநிலங்களின் நடுவே
விலைமதிப்பு மிக்கவை
என் வீடு
பால்கனியில் வைத்திருக்கும்
சிறுவாளி.,
தேங்கும் நீரை
பருகிட வரும்
குருவிகள்  மற்றும் பறவைகளை
ரசிக்க தெரிந்த
நானே விரட்டிவிடுகிறேன் ..

தேடி வருவதை விட
திரும்பிச்செல்வதையே
அதிகம் விரும்புகிறேன் ..

குருவியினங்களின்
சிணுங்கல்களை
அலைபேசியில் பதிந்து
அழைப்புமணியாகவே
வைத்திருக்கிறேன்..

குளிரூட்டும் ஏசி அறை
வெளியேற்றும்
ரசாயன நீரிடமிருந்து
அவைகளை காப்பாற்றும்
ஒவ்வொரு முறையும்
படப்படத்து போகும்
என் நெஞ்சம்.

**- தஞ்சாவூர்.சாயிராம்.**

ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
ஜூலை - ஆகஸ்ட் 2021
ஆண்டு 2 ▲ இதழ் 01

## தாய் தந்தை ஆசிரியர் தெய்வம்

பத்து மாதம் சுமக்கிறாள் கருவை
பித்துப் பிடிக்கும் வலி பொறுக்கிறாள்
கத்தும் குரல் கேட்கும் பேருவகையால்
சொத்தாக வரும் மகவின் முகம்பார்க்க
முத்தமழை பொழிந்தே மனம் மகிழ்கிறாள்
இத்தரையில் தாயைப் போல் தியாகியுண்டோ?

தாயின் பின்னணியில் தாங்கிடும் தூண் அவர்
சேயின் பராமரிப்பின் பொருளாளர் அவர்
வாயிற்காப்பாளராய் சேயின் பாதுகாப்பு அவர்
தாயினும் மேலாக மந்திரச்சொல்லின் வீரர் அவர்
பாயிலும் படுத்துறங்குவார் மகவுக்கு இடம்தரவே
நோயினை நொடியில் தீர்க்கும் அருமருந்து தந்தை

களிமண்ணைக் குழைத்து அழகாய் உருவாக்குவார்
உளியாய்ச் செதுக்கிக் கல்வியில் நல்வடிவமாக்குவார்
ஒளியாய் அறிவினை மிளிரச்செய்யும் வித்தகர்
துளித்துளியாய் அறியாமை போக்கும் அருமருந்தவர்
வெளியுலகின் அதிசயங்கள் அறிவிக்கும் அவரே
அளிக்கும் கல்வியில் வாழ்வேற்றந்தரும் குரு ஆவாரே

உலகின் ஆதாரமான பரம்பொருளே தெய்வமென
அலகில் அதற்கு வரையறைகள் வகுக்க முடியாது
இலகுவாய் ஆழ்ந்த வழிபாட்டில்தான் உணரமுடிகிற
திலகமாய் அறுதியிடமுடியா உள்ளுணர்வு ஊக்கமது
சொலவடையில் மனிதர்க்கும் மேலான சக்தியது
நலந்தரும் நல்வழிகாட்டியாய் வழிநடத்தும் தெய்வமது.

**கவிஞர் ராம்க்ருஷ்**

